


புரட்சிப்


# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மே 7, 2009 புரட்சி 8 முழக்கம் 17 விலை : ரூ.2.50


## கொளத்தூர் மணிக்கு உற்சாக வரவேற்பு

கழகத் தலைவர் கொளத்தூர் மணி மே 4 ஆம் தேதி மாலை 3.30 மணியளவில் மதுரை சிறையிலிருந்து 62 நாள் சிறை வாசத்துக்குப் பிறகு, விடுதலையான போது சிறை வாசலில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது.



கடந்த ஏப்ரல் 10 ஆம் தேதி கொளத்தூர் மணி, தேசிய பாதுகாப்பு சட்டத்தில் திண்டுக்கல் கூட்டத்தில் ஆற்றிய உரைக்காக கைது செய்யப் பட்டார். தேசிய பாதுகாப்பு சட்டத்தை நீதிமன்றம் ரத்து செய்த பிறகு, திண்டுக்கல் காவல்துறை பதிவு செய்த வழக்கில் பிணை கிடைப்பது ஒரு வாரம் தாமதப்படுத்தப் பட்டது.

சிறைவாசலில் பட்டாசு வெடிக்கப்பட்டு, வாடிப்பட்டி மேளத்தின் முரசம் முழங்க, பெரியார் திராவிடர் கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் உற்சாக வரவேற்பு அளித்தனர். மதுரை, மேட்டூர், சேலம், உடுமலை, பொள்ளாச்சி, கோவை, குடந்தை, திருப்பூர், காங்கேயம், தூத்துக் குடி பகுதிகளிலிருந்து தோழர்கள் பெரும் திரளாக வந்திருந்தனர்.

சிறைவாசலில் செய்தியாளர்களிடம் பேசிய கழகத் தலைவர் காங்கிரசு கட்சியை தமிழர்கள் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இரவு திண்டுக்கல்லில் தங்கி, காலை மேட்டூர் நோக்கி பயணமானார். சேலத்தில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. சேலத்தில் செய்தி யாளர்களுக்கு பேட்டி அளித்து விட்டு, மேட்டூர் நோக்கி சென்றார். வழி நெடுக உற்சாக வரவேற்பு வழங்கப் பட்டது.

## ஈழத் தமிழர்களைக் கொன்று குவிக்க இந்திய ஆயுதமா? ராணுவ வாகனங்கள் மறிப்பு

### பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உள்ளிட்ட 13 பேர் கைது

தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள ராணுவத்துக்கு இந்தியா ஆயுதங்களையும், பயிற்சிகளையும் வழங்கி வருவது தமிழர் களிடையே கடும் கொந்தளிப்பை உருவாக்கி யுள்ளது. இந்த நிலையில்,

கோவை வழியாக 80 லாரிகளில் ஆயுதங்கள் கொச்சி வழியாக கொழும்புக்கு அனுப்பப் படுகிறது என்ற செய்தி கடந்த 2 ஆம் தேதி பரவியது. செய்தியறிந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், ம.தி.மு.க.வினர், தமிழின உணர்வாளர்கள், பொது மக்கள் திரண்டு வாகனங்களைத் தடுக்க முயன்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், பெரம்பலூர் லட்சுமணன், கணபதி புதூர் பொன்சந்திரன், அவரது மனைவி தனலட்சுமி, மணியக்காரம்பாளையம் கிருஷ்ணசாமி, ஆவாரம்பாளையம் விக்னேஷ், சண்முக சுந்தரம், காளப்பட்டி அம்பேத்கர், ஜெயப் பிரகாஷ், ம.தி.மு.கவை சேர்ந்த பீளமேடு புதூர் முருகேசன், பீளமேடு சந்திரசேகரன், நீலம்பூர் பிரபாகரன், ராசிபாளையம் ரவீந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீது பயங்கர ஆயுதங்களுடன் சட்ட விரோதமாக கூடுதல், பணி செய்ய விடாது தடுத்தல், பொது சொத்துக்களை சேதம் விளைவித்தல் ஆகிய 6 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப் பட்டது. 13 பேரும் பல்லடம் நீதிபதி முன் நேர் நிறுத்தப் பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப் பட்டனர்.



கோவை, சேலம், உடுமலை, பொள்ளாச்சி பகுதிகளில் கழகத்தினரை போலீசார் வலை வீசி தேடி வரு கிறார்கள். கோவை - நீலாம்பூர் நெடுஞ்சாலை சந்திப்பில் சனிக்கிழமை மாலை இந்த சம்பவம் நடந்தது. 84 லாரிகளில் ஆயுதங்கள் மற்றும் ராணுவ தளவாடங்கள் ஏற்றப்பட்டு சாலை யில் வரிசையாக அணி வகுத்துச் சென்றதைக் கண்ட தமிழர்கள் கொதிப் படைந்தனர். ஒவ்வொரு நாளும் ஈழத்தில் இந்தியாவின் ஆயுதங்களைப் பயன்படுத்தி தமிழர்களை கொத்து கொத்தாக பிணமாக்கி வருகிறது சிங்கள ராணுவம். கொதித்துப் போய் நிற்கும் தமிழர்கள் உணர்வுகளைப் பற்றி கவலைப்படாது -

(3 ஆம் பக்கம்)

#### பயிற்சிக்குச் சென்றவர்கள் ஆய்தங்களை திரும்ப எடுத்துவர வேண்டிய தேவையில்லை

இந்நிகழ்வு பற்றி போர்ப்படையினரிடம் கேட்டபோது, “இலங்கைக்கு ஆயுதங்கள் எதுவும் அனுப்பப்படவில்லை. மதுக்கரை முகாமைச் சேர்ந்த 200 வீரர்கள் ஐதராபாத்தில் பயிற்சி எடுத்து வந்தனர். பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் மதுக்கரைக்குத் திரும்பியதை பொதுமக்கள் தவறாகப் புரிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்” என்று தெரிவித்தனர்.

ஆனால், இந்த விளக்கம் ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. “ஏனெனில் வழி மறிக்கப்பட்ட ஊர்திகளில் அவை ஜெபல்பூரில் உள்ள ஊர்தித் தொழிற்சாலைக்குச் சொந்தமானவை என்று எழுதப்பட்டிருந்தது. மேலும் இந்த ஊர்திகளில் போர்ப்படை வீரர்கள் எவரும் வரவில்லை. ஓட்டுநரும், உதவியாளரும் மட்டுமே இருந்தனர். போர்ப் படை வீரர்கள் பயிற்சிக்குச் சென்று வருவதாக இருந்தால் அவர்களுடன் 80 ஊர்திகளில் ஆய்தங்களைக் கொண்டு சென்று திரும்ப எடுத்துவர வேண்டிய தேவையில்லை” என்று பாதுகாப்பு வல்லுநர்கள் தெரிவித்தனர்.

## இரத்தக் கறை படிந்த கரங்களுடன் வாக்கு கேட்கவரும் காங்கிரசை தோற்கடிப்பீர்!

# இலங்கை அரசு கூறுகிறது: இந்தியா போர் நிறுத்தம் கோரவில்லை

இலங்கையில் போர் நிறுத்தம் செய்வது குறித்து இந்திய அதிகாரிகள் வலியுறுத்தவில்லை என்று இலங்கை பாதுகாப்புத் துறை செயலரும், அதிபர் ராஜபட்சேவின் சகோதரருமான கோத்தபய ராஜபட்ச தெரிவித்தார்.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், வெளியுறவுத் துறைச் செயலர் சிவசங்கர் மேனன் ஆகிய இருவரும் 24 ஆம் தேதி இலங்கைக்கு திடீர் பயணம் மேற்கொண்டனர். அதிபருடன் அவர்கள் பேச்சு நடத்தினர்.

அவருடன் நடத்திய பேச்சு குறித்து விவரம் எதுவும் அப்போது தெரிவிக்கப்படவில்லை. இந் நிலையில், 'சண்டே அப்சர்வர்' பத்திரிகைக்கு கோத்தபய ராஜபட்ச அளித்த பேட்டி ஞாயிற்றுக் கிழமை வெளியாகியுள்ளது. அதில் சண்டை நிறுத்தம் தொடர்பாகவோ அல்லது விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ தாக்குதலை நிறுத்துவது குறித்தோ இந்திய அதிகாரிகள் வற்புறுத்தவில்லை. அரசின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவது தொடர்பாகவே அவர்கள் பேச்சு நடத்தியதாக கோத்தபய ராஜபட்சே தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் கூட்டணிக் கட்சியான தி.மு.கவின் நிர்பந்தம் காரணமாகவே இந்திய அரசு, இலங்கைக்கு நெருக்குதல் அளித்து வருவதாக செய்தி வெளியானது குறித்து கேட்டதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் கூறியதாவது:

விடுதலைப் புலிகள் மீதான ராணுவ நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாக இலங்கைக்கு இந்திய அதிகாரிகள் எவ்வித நெருக்குதலும் தரவில்லை. விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ள அப்பாவி மக்களை பத்திரமாக மீட்பது தொடர்பாகவே அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

போரில் அப்பாவி தமிழர்கள் உயிரிழப்பது குறித்து இந்திய அரசு சார்பில் அவர்கள் அப்போது கவலை தெரிவித்தனர். மனிதாபிமான உதவிகளை இந்திய அரசு எப்படி வழங்குவது என்பது குறித்தும் ஆலோசனை மேற்கொண்டனர்.

போர் பகுதியிலிருந்து அரசு கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தஞ்சம் புகுந்த தமிழர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள வசதிகள் குறித்து இந்திய அதிகாரிகள் இருவரும் அப்போது திருப்தி தெரிவித்தனர். மேலும் இந்தியா சார்பில் நிவாரண உதவியாக ரூ.200 கோடி அளிக்கப்படும் என்று அவர்கள் உறுதி அளித்தனர் என்றார்.

தேர்தல் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் தமிழக அரசு இலங்கைப் பிரச்சினையை எழுப்பி வருகிறது. அதனால் இந்திய அரசும் அதை கவனத்தில் எடுத்துக் கொண்டு அவ்வப்போது இலங்கையுடன் பேச்சு நடத்துகிறது.

இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் பிரான்ஸ் ஆகிய மேற்கத்திய நாடுகளும் புலம் பெயர்ந்த தமிழர்களின் வாக்குகளை கருத்தில் கொண்டே போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கைக்கு நெருக்குதல் அளிக்கின்றன. புலம் பெயர்ந்த மக்கள் அளிக்கும் நிதியை அந்நாட்டு அரசியல் கட்சிகள் பெற்றுக்கொள்கின்றன. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை காப்பாற்ற வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள் என்றார் கோத்தபய.

# பெரியார் சிலையை உடைத்த தயாநிதி ஆதரவாளர்கள்

படத்தைப் பாருங்கள்; கழகத்தைச் சார்ந்த தமிழ்ச் செல்வியை ஓர் ஆண் போலீஸ் ஏதோ கிரிமினலைப் போல் கரங்களைப் பிடித்து இழுத்து வருகிறார். பின்னால் பெண் போலீசார் அணி வகுத்து நிற்கிறார்கள். இந்த பெண்கள் செய்த குற்றம் என்ன?



இராயப்பேட்டை கழக அலுவலகத்தில் உள்ள பெரியார் சிலையை மத்திய சென்னை தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறனின் தி.மு.க. ஆதரவாளர்கள் உடைத்து சேதப்படுத்தியதை தட்டிக் கேட்டதுதான் இவர்கள் செய்த குற்றம். பெரியார் கரம் பிடித்து வளர்ந்ததாகக் கூறும் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் தான் பெரியார் சிலை உடைக்கப் படுகிறது. சிலையை உடைத்தது பார்ப்பனர்கள் அல்ல, மதவெறிச் சக்திகள் அல்ல, பெரியார் அண்ணா கொள்கை வழி வந்ததாகக் கூறிக் கொள்ளும் கட்சி யினரே இதைச் செய்கிறார்கள். சிலைகளை சேதப்படுத்துவோர் மீது தேசியப் பாதுகாப்பு சட்டம் பாயும் என்றார் தமிழக காவல்துறை இயக்குனர். ஆனால், சிலையை உடைத்ததை தட்டிக் கேட்டவர்களுக்கு, அதுவும் பெண்களுக்கு இந்த ஆட்சியில் சிறை. பிணையில் வெளி வராத வழக்குகளில் கழகத்தைச் சார்ந்த 2 பெண்கள் சுதாவும், தமிழ்ச்செல்வியும் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். பெரியார் சிலையை உடைத்தவர்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். அது மட்டுமல்ல, இரவில் படிப்பகத்துக்குள் நுழைந்து, அங்கே இருந்த பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர் எழுதிய நூல்களையும் தூக்கிச் சென்று விட்டனர். கலைஞர் எழுதிய நெஞ்சுக்கு நீதி, சங்கத் தமிழ் உட்பட அத்தனை நூல்களையும், தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஆயிரம் விளக்கு உசேன் அன்பளிப்பாக வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியார் சிலை உடைப்பாளர்களாகவும், கலைஞர் கருணாநிதி எழுதிய நூல்களை அப்புறப்படுத்தக் கூடியவர்களாகவும் தி.மு.க.வினர். "பரிணாம வளர்ச்சி" பெற்று நிற்கிறார்கள். தி.மு.க. எங்கே போகிறது? காவல்துறையின் இந்த அத்துமீறல்களுக்கு எதிராக பேசும் கழகம் மனித உரிமை ஆணையத்திடம் புகார் தர இருப்பதோடு காவல்துறையினர்மீது வழக்கு தொடரவும் முடிவு செய்துள்ளது.

# இந்தியாவின் உதவி: சிங்கள அமைச்சர் ஒப்புதல்

ஈழத் தமிழர்களின் படுகொலைக்குத் துணை போன காங்கிரசு அரசின் முகமூடியைக் கிழித்த இலங்கை அமைச்சர் -"இந்தியாவின் உதவியால்தான் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றோம்" என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் வெற்றி பெறுவதற்கு இந்திய அரசாங்கமே மிகப் பெரிய உதவிசெய்தது. இந்திய அரசாங்கத்தின் உதவிகள் இல்லையென்றால் விடுதலைப் புலிகளை போரில் வெற்றி கொண்டிருக்க முடியாது.

எனவே, இந்திய அரசாங்கத்திற்குப் புகழாரம் சூட்டி கட்சி வேறுபாடுகள் இன்றி இந்தியாவுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

புல்மோட்டையில் தற்காலிக மருத்துவ முகாம் அமைத்துள்ள இந்திய மருத்துவக் குழு, இந்திய ராணுவ மருத்துவக் குழு அல்ல. இந்திய இராணுவத்திற்கு மருத்துவம் செய்த இராணுவத்தினர் அல்லாத மருத்துவக் குழு தான் இங்கு வருகை தந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டே இந்திய மருத்துவக் குழு இங்கு சேவை செய்யும். இந்தியா வழங்கிய நிவாரணப் பொருட்கள்கூட இலங்கையின் இறையாண்மைக்கு கட்டுப்பட்ட உதவிகள்தான் என்று இலங்கை நாடாளுமன்ற சுகாதாரத் துறை அமைச்சர்நிமல் சிறிபால டி சில்வா கூறினார்.

(மார்ச் 17 ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் வி.ஜே.முலொக்கு பண்டார தலைமையில் நடந்த இலங்கை நாடாளுமன்றக் கூட்டத்தில், இலங்கைக்கு இந்திய மருத்துவர் குழு அழைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.வி.பி. கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திசநாயக்க பேசினார்.

அவருக்கு விளக்கமளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு கூறினார்.

இனப்படுகொலை செய்யும் சிங்கள அரசுக்கு இராணுவ உதவி, ஆயுத உதவிசெய்த சோனியாவின் காங்கிரசை தமிழகத்திலிருந்து விரட்டி அடிப்போம்.

நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியை தழுவச் செய்வோம்.

# இந்தியாவின் ராணுவ உதவிகளைப் பாரீர்!

நம் இனத்தை இப்படிக் கொன்றதும் அழித்ததும் யார்?

கொத்துக் கொத்தாக நம் குழந்தைகள் ஈழத்தில் செத்து விழுகின்றன!

உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட பாஸ்பரஸ் குண்டுகளையும் நச்சு வாயுக் குண்டுகளையும் தமிழர் வாழும் இடங்கள் மீது வீசுகிறார்கள்.

குண்டு விழுந்த இடங்கள், ஆட்கள், விலங்குகள், காடுகள் என்று அனைத்துமே எரிந்து கரிக்கட்டைகளாகின்றன!

மருத்துவமனைக்கு வரும் தமிழ்ப் பெண்களிடம் கட்டாயக் கருக்கலைப்பு செய்கிறார்கள்!

வயிற்றிலிருக்கும் சிசுக்களையும் வெட்டிக் கொல்கிறார்கள்!

அண்மையில் உலக நாடுகளால் தடை செய்யப்பட்ட நச்சு வளி (விஷ வாயு)க் குண்டுகளை வீசிக் கொன்றிருக்கிறார்கள்!

இதுவரை ஒன்றல்ல இரண்டல்ல! இரண்டரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்!

“நாங்க இல்லை! எங்களுக்கு தொடர்பு இல்லை!” என்று காங்கிரசுக் கட்சி சொல்கிறது. தி.மு.க.வும் அதை வழி மொழிகிறது!

ஆனால்...

- செப்டம்பர் 9 அன்று சிங்களர்களின் வவுனியா படைத்தளம் தாக்கப்பட்ட போது இந்திய வீரர்கள் காயமுற்றனரே அது எப்படி?
- மேலூருக்கு அருகில் ஒரு லாரி பிடிபட்டபோது அது நிறைய இலங்கைக்குச் செல்லும் ஆயுதங்கள் இருந்தனவே, அது எப்படி?
- இலங்கைக்கு நமது வரிப்பணத்திலிருந்து 2000 கோடி ரூபாய் அள்ளிக் கொடுத்தீர்களே அது எதற்காக?
- வேவு பார்க்க இந்திய விமானங்களும் ரேடார்களும் பயன்படுத்தப்பட்டதே, அது எப்படி?
- கல்முனை குள உடைப்பில் பல நூறு இந்திய வீரர்கள் செத்துப் போனதாகச் செய்தி வந்ததே அது எப்படி?
- தஞ்சை வழியாக இலங்கைக்கு இராணுவத் தளவாடங்கள் அனுப்பப்பட்டது எதற்காக?
- ஈரோடு வழியாக 60-க்கும் மேற்பட்ட ராணுவ டாங்குகள் அனுப்பப்பட்டதே அது எதற்காக?
- தாம்பரத்தில் பயிற்சி பெற சிங்கள வீரர்கள் வந்ததும் அவர்கள் துப்பாக்கி காட்டி நம் தமிழ் மக்களை மிரட்டியதும் செய்தியில் வந்ததே, அது எப்படி?
- புனே நகருக்கு போரில் இறந்த 200 இந்திய வீரர்களின் சடலங்கள் வந்ததாகச் செய்தி வந்ததே எப்படி?
- நுங்கம்பாக்கத்தில் காயப்பட்ட பலர் மருத்துவம் பார்க்கிறார்கள் என்ற செய்தி வருகிறதே எப்படி?
- “போருக்கு உதவுவது இந்தியா தான்” என்று இலங்கைத் தலைமையமைச்சர் நன்றி சொன்னாரே அது எப்படி?
- இப்போது கொடிய நச்சு வளி (விஷ வாயு) ஆயுதங்களைப் பயன்படுத்தியது யார்?

தாக்குதலில் ஈடுபட்டிருக்கிற படையில் பாதிக்கு மேல் இந்தியப் படைகள்தான் என்று பிரெஞ்சு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறதே, எப்படி?

வெளியில் கசிந்த செய்திகளே இவ்வளவு! கமுக்கமாய் எவ்வளவோ!

யாருடைய வரிப்பணம் இப்படி இலங்கையில் கொட்டப் படுகிறது?

குடியாட்சி நாட்டில் ஏன் இந்த இராணுவ நடவடிக்கைகள் கமுக்கமாகவும், கள்ளத்தனமாகவும் நடைபெறுகின்றன!

ஒட்டு மொத்தத் தமிழ்நாட்டுத் தமிழர்களும் கிளர்ந்து எழுந்து எதிர்ப்பு தெரிவித்தபோதும் ஈழத் தமிழர்களை அழிப்பதில் இவர்களுக்கு ஏனிந்த மகிழ்ச்சி? ஏனிந்த கொக்கரிப்பு? ஆனால்...

இரத்தம் காயாத கைகளோடு தமிழ்நாட்டுத் தெருக்களில் இறங்கி, “எங்களுக்கு வாக்களியுங்கள்” என்று கேட்டு அதே கும்பல் இப்போது நம்மிடம் வருகிறது.

தமிழர்களே, எச்சரிக்கை!

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தமிழகத்திலிருந்து கொச்சி வழியாக - ராணுவத்தினர், ஆயுதங்களைக் கொண்டு போவது வழக்கமாக இருந்து வருகிறது.

கோவை அருகே உள்ள மதுக்கரை ராணுவ முகாமைச் சார்ந்த ராணுவத்தினர், அய்தரா பாத்தில் பயிற்சியை முடித்து கொண்டு, கோவை திரும்பியதாக ராணுவத் தரப்பில் கூறப்பட்டாலும், அந்த லாரிகளில் வெடி குண்டுகளும், ஏவுகணைகளும் இருந்தன. அவைகளால் ஆத்திர மடைந்த பொது மக்கள் வெளியே தூக்கி வீசி வாகனங்களின் சக்கரங் களை சேதப்படுத்தியதாக செய்திகள் கூறுகின்றன. செய்தியறிந்த கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் விரைந்தார்.

தோழர்களும் பொது மக்களும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், ஆயுதங்களை வழங்கும் இந்திய அரசுக்கு எதிராகவும் முழக்கமிட்டு வாகனங்களை மறித்தனர்.

பின்னால் வந்து கொண்டிருந்த ராணுவ வீரர்கள் சூலூரில் லாரிகளை நிறுத்தி விட்டு சம்பவ இடத்துக்கு விரைந்து இரும்பு கம்பிகளால், எதிர் பட்ட எல்லோரையும் தாக்கினர். காவல்துறையினர், ராணுவத் தினரைத் தடுத்து, அப்பாவி மக்களை தாக்காதீர் என்று கேட்டும், ராணுவத்தினர் தாக்கு தலை நிறுத்தவில்லை.

இராணுவத்தினர் தாக்குதலில் சன் தொலைக்காட்சி செய்தியாளர் அவிநாசிலிங்கம் மண்டை உடைந்தது. அவர் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பொய்ச் செய்திகளை ஒளிபரப்பி வரும் சன் தொலைக்காட்சி, தனது செய்தியாளர் ராணுவத்தால் தாக்கப்பட்டதைக்கூட ஒளிபரப்பவில்லை. ஈழத் தமிழர் மீதான இனப் படுகொலை தொடர்பான செய்திகளை முழுமையாக இருட்டடித்து, சிங்கள ராணுவத்தை மக்களின் கோபத்திலிருந்து பாதுகாத்து வரும் சன் தொலைக்காட்சி - இதிலும், இந்திய ராணுவத்துக்கு ஆதரவாகவே செய்திகளை ஒளிபரப்பியது.

செய்தியாளர் ராணுவத்தால் தாக்கப் பட்டதை எதிர்த்து கோவை பத்திரிகை யாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டச் செய்தியையும் சன் தொலைக்காட்சி இருட்டடிப்பு செய்து விட்டது.

இந்த வழக்கு விசாரணையை உள்ளூர் காவல் துறையினர் மேற் கொள்ள வேண்டுமே தவிர ராணுவத் தினரிடம் ஒப்படைக்கக் கூடாது என்று பத்திரிகையாளர்கள் வற்புறுத்தினர்.

இதற்கிடையே ஆயுதம் ஏந்தி வந்த இரண்டு ராணுவ லாரிகள் கொச்சி துறைமுகம் வந்து சேர்ந்துள்ளதாக கேரள ஏடுகள் செய்தி வெளியிட் டுள்ளன. தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவர், ராணுவத்தினர் ஒருவரிடம் கேட்ட கேள்விக்கு, கொச்சி துறைமுகம் போவதாகக் கூறியிருப்பது - வீடியோ காட்சிகளாகப் பதிவாகியுள்ளது. மக்கள் தொலைக்காட்சி இதை ஒளிபரப்பியது.

இராணுவத்துக்கு எதிராக தமிழர்கள் நடத்திய போராட்டம் தமிழகத்தில் பேரெழுச்சியை உருவாக்கியுள்ளது. உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் - தமிழகத்தில் உருவாகியுள்ள எழுச்சியைப் பாராட்டி வரவேற்கிறார்கள். ✦

## தா.பாண்டியன் கண்டனம்

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இலங்கை அரசுக்கு ஆயுதம் கொடுத்து, ஈழத்தில் தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு இந்திய அரசுதான் காரணம் என்ற கோபம் தமிழகம் முழுவதும் பெருக்கெடுத்து நிற்கிறது. இதன் வெளிப்பாடாகத்தான் கோவைக்கு அருகில் ராணுவ லாரிகளை மக்கள் தடுத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்.

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து கொல்லப்படுவதால் எழுந்த கோபம் தான் இது என்பதை, இந்த நேரத்தில் அரசாங்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக தொடர்புடையவர்கள் என்று கூறி கைது செய்தல், கடுமையான அடக்குமுறைகள் ஆகியவற்றை கண்டிக்கிறோம்.

# இராயப்பேட்டையில் நடந்தது என்ன?

# ஈழத் தமிழர் பிரச்சினையை பேசியதற்காக கழகத்தினர் மீது தாக்குதல்; பொய் வழக்கு

தயாநிதிமாறன் போட்டியிடும் மத்திய சென்னை தொகுதியில் ஈழத் தமிழர் இனப்படுகொலையை முன்னிறுத்திப் பேசிய கழகத் தோழர்களை காவல்துறையும், தயாநிதி மாறன் ஆட்களும் இணைந்து தாக்கியதோடு கழகத் தோழர்கள் மீதே பொய் வழக்கு போட்டு கைது செய்துள்ளனர். இது பற்றி கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விடுத்துள்ள அறிக்கை:

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதியில் பெரியார் திராவிடர் கழகம் ஈழத் தமிழர் பிரச்சினையை முன் வைத்து செய்து வரும் தேர்தல் பிரச்சாரத்தை தி.மு.க.வினர் காவல் துறையுடன் இணைந்து அடக்குமுறையால் முடக்கி வருகிறார்கள். கடந்த 25 ஆம் தேதி திருவல்லிக்கேணி பகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து வேன் வழியாக பிரச்சாரம் செய்தபோது பாதி வழியில் நிறுத்தி ஈழத் தமிழர் பிரச்சினையை பேச அனுமதிக்க முடியாது என்று கூறி வேனை பறிமுதல் செய்ததோடு 5 பேர் மீது தேச துரோக வழக்கு தொடுத்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மீண்டும் 2.509 அன்று கழகத்தினர் பிரச்சாரத்தை நடத்தியதால் தி.மு.க வினர் இரவு 10 மணி அளவில் காவல் துறையினருடன் வந்து ‘பெரியார் படிப்பகத்தை’ அடித்து நொறுக்கி அருகில் இருந்த பெரியார் சிலையையும் சேதப்படுத்தினர், தாக்குதலில் மூன்று பேர் படுகாயத்துக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இரவு முழுவதும் வி.எம். சாலையில் பொது மக்கள் வீடுகளில் நள்ளிரவில் புகுந்து தேடுதல் வேட்டை என்ற பெயரில் காவல் துறை இழிவாக நடத்தியுள்ளது. உண்மை குற்றவாளிகளை கைது செய்ததற்கு பதிலாக தாக்குதலுக்கு உள்ளான பெரியார் திராவிடர் கழகத்தினர் மீதே தி.மு.க.வினரையும், காவல்துறையினரையும், தி.மு.க. தேர்தல் அலுவலகத்தையும் தாக்கியதாக பொய் வழக்கு போட்டு மீண்டும் 5 பேரை கைது செய்து பிணையில் வர இயலாத பிரிவுகளில் வழக்கு தொடுத்து சிறையில் அடைந்துள்ளனர். இவர்களில் இரண்டு பேர் பெண்கள். கழக குடும் பத்தைச் சேர்ந்த சுதா, வயது 35, தமிழ்ச்செல்வி வயது 25 ஆகிய தமிழ்ச் செல்வியின் ஒரு வயது கை குழந்தையை உடன் கொண்டு செல்ல காவல் துறை அனுமதிக்கவில்லை.

ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை தொடர்பான எந்த பிரச்சாரமும் நடக்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, பெரியார் தி.க.வினர்மீதும் அவர்கள் குடும்பத்தினர் மீதும் காவல்துறை தி.மு.க.வினர் ஆதரவோடு வன்முறையை கட்டவிழ்த்து உள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் பெரியார் தி.க.வினரை கைது செய்து பெரியார் தி.க. வினரின் பணியை முடக்கிவிட காவல்துறை மேற்கொண்டு வருகிறது. கருத்துரிமைக்கு எதிரான இந்த ஒடுக்குமுறையை கண்டிக்க தமிழ் இன உணர்வாளர்களும், மனித உரிமை அமைப்புகளும் முன் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## வெட்கம்! வெட்கம்!

ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு துணைபோகும் காங்கிரசுக்கு - ஆயுதங்களை அள்ளிக் கொடுத்து தமிழர்களை கொல்லச் சொல்லும் காங்கிரசுக்கு -

போரை நிறுத்து என்று கூறவே மாட்டேன் என்று அடம் பிடிக்கும் சோனியாவின் காங்கிரசுக்கு -

“உலகத் தமிழர் தலைவர்” கி.வீரமணி வாக்கு சேகரிக்கிறாராம். மானமுள்ள திராவிடர்க ழகத் தோழர்களே,

இதை சகித்துக் கொண்டு இன்னும் வீரமணி துதி பாடிக் கொண்டிருக்கத்தான் போகிறீர்களா?

வெட்கம்; மகா வெட்கம்!

## கலைஞர் அன்று பேசியது...

இன்றைக்கு எங்கள் அக்காள்-தங்கை, எங்கள் அண்ணன்-தம்பி, எங்களைப் பெற்றெடுக்காத தாய் தந்தை போன்றவர்கள் அவர்கள் எல்லாம் இலங்கைத் தரணியில் சிங்கள வெறியர்களால் இராணுவ உதவியோடு - போலீஸ் துணையோடு - கொல்லப்படுகிறார்கள் - மானபங்கப்படுத்தப்படுகிறார்கள். ஒரு கர்ப்பிணியின் வயிறு வெட்டப்படுகிறது. அவள் கருப்பையிலே இருக்கின்ற குழந்தை வெளியே எடுக்கப்படுகிறது. அதைத் தூக்கி வெளியில் வீசுகிறார்கள். சிதறி உடைகிறது அந்தக் குழந்தை! இப்படிப்பட்ட கோரக்காட்சிகள் ஒன்றா! இரண்டா!

அப்படிப்பட்ட கோரக் காட்சிகளை எல்லாம் நாங்கள் சகித்துக் கொண்டு எத்தனை நாளைக்கு இருப்பது? நாங்கள் ஒட்டிக் கொண்டிருக்க - இந்தியாவோடு இணைந்து இருக்க - இந்தியா வேறு - தமிழ்நாடு வேறு என்றில்லாமல் இந்தியா தான் தமிழ்நாடு - தமிழ்நாடுதான் இந்தியா என்று கருதிக் கொண்டிருக்க - நீங்கள் தமிழர்களுக்கு செய்தது என்ன?

உங்களுடைய தேசியம் தமிழ்நாட்டிற்கு வேகமாக வரத் தயக்கம் காட்டுவது ஏன்? உங்களுடைய தேசியம் தமிழ்நாட்டின் எல்லைக்கு அப்பால் போய் நின்று விடுகிறதே என்ன காரணம்?

இவைகளைக் கேட்கக் கூடாதா? இவைகளைக் கேட்டால் பிரிவினையா?

**– 1988 இல் கலைஞர் உரை**
**(தி.மு.க. வெளியீடான ‘எட்டப்பர்கள் எச்சரிக்கை’ நூலிலிருந்து)**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

## இந்தியாவுக்கு இலங்கை பாராட்டு

இலங்கையில் தீவிரவாதத்தை ஒழிக்க இந்தியா முழு ஆதரவு அளித்து வருகிறது என அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து இலங்கை ராணுவ இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

உலக அளவில் மனித உரிமைகளுக்கான காவலனாக தன்னை தானே அறிவித்துக் கொண்டுள்ள சில மேலை நாடுகளிடம் இருந்து போர் நிறுத்தம், பொது மன்னிப்பு போன்ற வெட்கங்கெட்ட கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. தீவிரவாதத்துக்கு எதிராக போராடி வரும் மூன்றாவது ஏழை உலக நாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கின்றன.

ஆனால், இலங்கையில் தீவிரவாதத்தை முற்றிலுமாக அழித்து ஒழிப்பதில் இந்தியா முழு ஆதரவு அளித்து வருகிறது. அதுபோல சீனா, பாகிஸ்தான், ரஷியா, ஈரான், லிபியா, ஜப்பான் போன்ற நாடுகளும் இலங்கை அரசை ஆதரிக்கின்றன. அந்த நாடுகளுக்கு இலங்கை நன்றி தெரிவிக்கிறது.

இவ்வாறு அந்த கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

**நன்றி : ‘தினத்தந்தி’ 4.5.2009**


## விடுதலை இராசேந்திரன் கைது!

சோனியா - தமிழ்நாட்டில் தேர்தல் பிரச்சாரம் செய்ய 6 ஆம் தேதி வரவிருப்பதையொட்டி 5 ஆம் தேதி பகல் 12 மணியளவில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவரது இல்லத்தில் முன்கூட்டியே கைது செய்யப்பட்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th May 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மே 14, 2009 புரட்சி 8 முழக்கம் 18 விலை : ரூ.2.50

## கலைஞர் கருணாநிதி – ஜெயலலிதா பற்றி

# வீரமணி "உதிர்த்த முத்துக்கள்" பாரீர்!

*ஜெயலலிதாவின் தீவிர எதிர்ப்பாளராகவும், கலைஞர் கருணாநிதியின் தீவிர ஆதரவாளராகவும் வீரமணியும், விடுதலையும் பேசியும் எழுதியும் வரும் நிலையில் கடந்த காலங்களில் – கி.வீரமணி, செயலலிதா, கலைஞர் கருணா நிதி பற்றி பேசிய கருத்துகளை இங்கே தொகுத்து தந்துள்ளோம்.*

### கலைஞரின் பார்ப்பனத்தனம்!

பல ஊர்களில், திராவிடர் கழகம் பிரச்சாரம் செய்யும் போது, ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரக் கும்பலான இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் அதைத் தடுப்பதற்காக, 'தி.க. புண்படுத்துகிறது' என்று ஒரு புகார் கொடுப்பதை வாடிக்கை யாக, வழமையாக வைத்துள்ளனர்.

நாம் நடத்தும் மதவாதக் கண்டன மாநாடுகள் நாடு தழுவிய அளவில் மிகப் பெரிய விழிப் புணர்வைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருவதாலும், தமது கூட்டணியாகிய பி.ஜே.பி., தி.மு.க. அணிக்கு மக்கள் ஆதரவு - குறிப்பாக சிறு பான்மைச் சமூகத்தின் ஆதரவு - அறவே இல்லை என்ற ஏமாற்றம், எரிச்சல் காரண மாகவும், நமது தி.மு.க. தலைவர், கேவலமான அளவுக்கு இப்படி ஒரு 'பார்ப்பனத் தனத்திற்கு' மற்றவர்களை உசுப்பிவிடும் தரக்குறைவான, காதொடிந்த ஊசியளவுக்கூட பயன்பட முடியாத ஒரு பிரச்சாரத்தில் இறங்கியுள்ளார்.

அவர் நிலை கண்டு நான் மிகவும் இரக்கப் படுகின்றேன்.

– 'விடுதலை' (26.6.99)யில் கி.வீரமணி

### கலைஞரின் சிண்டு முடியும் வேலை

இப்பொழுது இதோ ஒரு செய்தி! பெரியார் மாவட்டம் கோபி வட்டம் தாசப்பக் கவுண்டனூரில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணியினர் சுவர்களில் பட்டவர்த்தனமாக எழுதியுள்ளனர்.

இதோ அந்த வாசகம்:

*"ஜூன் 27 மாலை 3 மணிக்கு பெரியார் படத்துக்கு செருப்படி ஊர்வலம் நடைபெறும். அனைவரும் வாரீர்."*

இது பற்றி காவல்துறைக்குப் புகார் கொடுத்தும், முதல் அமைச்சருக்குத் தகவல் தெரிவித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் இல்லை.

இவ்வளவுக்கும் சுவர் எழுத்து என்பது தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் மீறி தந்தை பெரியார் அவமானப் படுத்தப் படுகிறார் என்றால், அதற்குக் காரணம் எதைப் பலி கொடுத்தாவது இந்துத்துவா வாதிகளைத் திருப்திப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் தான்.

தி.மு.க.வின் பொதுக் குழுத் தீர்மானத் திலேயே தந்தை பெரியாரை விஷமப் பிரச்சாரம் செய்தவர் என்று குறிப்பிட்டுள்ள நிலையில், ஆர்எஸ்.எஸ்.காரர்கள் அந்த சைகையைப் புரிந்து கொள்ள மாட்டார்களா?

கலைஞர் அவர்களின் திரிபு வேலை, சிண்டு முடியும் வேலை எல்லாம் செல்லரித்துப் போன பழைய ராஜதந்திரம் - இனி அது செல்லாது!

தி.மு.க. என்பது வெறும் அரசியல் கட்சி யல்ல; சமூகப் புரட்சி கொள்கை யுடையது என்று ஒரு பக்கத்தில் பேசுவது - இன்னொரு பக்கத்தில் திராவிடர் கழக பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பற்றி சிண்டு முடியும் பாணியில் திசை திருப்பி பேசுவது - இந்த இரட்டை நாக்கை, எல்லாக் கட்சிகளிலும் உள்ள பகுத்தறிவுவாதிகள் புரிந்துகொள்வார்கள்.

எந்த நோக்கத்துக்காக முதலமைச்சர் இந்தப் பிரச்சினையை இப்பொழுது கையில் எடுத்துக் கொண்டுள்ளார் என்பதை சிறுபான்மையினரும் உணர்வார்கள்.

பொறுப்பு வாய்ந்த ஒரு பெரிய பதவியில் உள்ளவர்க்கு ஏனிந்த "கோணல் வேலை" என்று வாக்காளர்களும் உணர்ந்து நல்ல பாடம் கற்பிப்பார்கள் என்பதில் அய்யமில்லை.

– 'விடுதலை' (26.6.99)யில் கி.வீரமணி

### ஜெயலலிதா வேட்பு மனு தள்ளுபடி கருணாநிதியின் சூழ்ச்சி

*2001 ஆம் ஆண்டு நடந்த சட்ட மன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. வை ஆதரித்து பிரச்சாரம் செய்தார் கி.வீரமணி. தேர்தலில் தி.மு.க. தோல்வி அடைந்தது. தேர்தல் முடிவுகள் வந்த வுடன் 21.5.2001 அன்று நாகை மாவட்டம் செம்பனார் கோயிலில் ஒரு கூட்டத்தில் கி.வீரமணி பேசினார். அவரது உரையை 'ஜாதிமத வெறியும் தமிழக தேர்தலும்' என்ற தலைப்பில் பகுத்தறிவாளர் கழக நூலாக 2001 இல் வெளியிட்டது. அதிலிருந்து சில பகுதிகள்.*

இப்பொழுது மூத்த தலைவராக இருக்கக் கூடியவர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள். இன்றைக்கு அவருடைய நிலை என்ன ஆயிற்று? கலைஞர் கருணாநிதி அவர்கள் இவ்வளவு பெரிய தோல்வியை தேர்தலில் சந்தித்தார் என்பது தி.மு.கழகத் தோழர்களுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கலாமே தவிர, எங்களைப் பொறுத்த வரையிலே அது அதிர்ச்சியே அல்ல.

200 இடங்களில் வெற்றி - முன்பே சொன்னேனே...

நான் கடைசியாக மயிலாடுதுறையில் பேசும்பொழுது என்ன சொன்னேனோ அது நடந்தது. நான் பெரிய ஆரூடக்காரன் என்பதற்காகச் சொல்லவில்லை. ஊர் ஊராக மக்களை சந்திக்கின்றோம். மக்களின் நிலவரத்தை நன்றாகத் தெரிந்து கொள்கின்றோம்.

தேர்தலில் 200 இடங்களுக்குக் குறையாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலே இருக்கக் கூடிய செல்வி ஜெயலலிதா, தலைமையிலே இருக்கக்கூடிய மதச்சார்பற்ற கூட்டணி தான்வெற்றி பெறும் என்பதைத் தெளிவாகச் சொன்னோம்.

### ஜெயலலிதா அவர்கள் தான் முதல்வர்

அது மட்டுமல்ல; செல்வி ஜெயலலிதா அவர்கள்தான் அடுத்த முதலமைச்சர் என்றும் சொன்னேன். தி.மு.க. அரசு எத்துணை சூழ்ச்சி செய்தாலும், நீங்கள் ஆட்கள் மூலமாக வேட்பு மனுவை நிராகரித்தாலும் அடுத்தபடியாக செல்வி ஜெயலலிதா அவர்கள்தான் முதல்வர் என்று சொன்னோம். நல்ல வாய்ப்பாக தேர்தல் முடிந்து அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றிருக்கின்றது. அ.தி.மு.க. கூட்டணியும் தேர்தலில் போட்டி யிட்டார்கள். தி.மு.க. கூட்டணியும் தேர்தலில் போட்டியிட்டார்கள். மொத்த இடங்கள் 234. புவனகிரியில் வேட்பு மனுவை ஏதோ காரணம் காட்டி ஒரு தொகுதியை தள்ளினார்கள். உடனே ஜெயலலிதா அவர்கள் விடவில்லை.

சுயேச்சையாக நின்ற ஒருவருக்கு வாழைப் பழச் சின்னம் என்று சொன்னார்கள். புவனகிரி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் அ.இ. அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெய லலிதா அவர்கள் வாழைப்பழச் சின்னத்தைக் காட்டி விட்டு தேர்தல் பிரச்சாரம் செய்தார்கள். புவனகிரி தொகுதி வேட்பாளர் - வாழைப் பழச் சின்னத்தில் நின்ற வேட்பாளரும் வெற்றி பெற்றுவிட்டார். ஆக 234 தொகுதிகளில் 196 இடங்களில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றிருக்கின்றது.

196 தொகுதிகளில் வெற்றி பெற்று - மதச் சார்பற்ற கூட்டணி இந்தியாவிலேயே தமிழகத் தில்தான் வெற்றி பெற்றுள்ளது. (பலத்த கைதட்டல்)

– 21.5.91 செம்பனார் கோயிலில்
கி.வீரமணிபேச்சு

....இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத் திலும் இல்லாத தனித்தன்மையோடு மதச்

(2 ஆம் பக்கம்)

# ஞாபகம் வருதே... ஞாபகம் வருதே...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி உருவாயிற்று.

அந்தக் கூட்டணியிலிருந்து உடனே பா.ம.க. வந்தது. தமிழ்நாட்டில் பாரம்பரியம் மிக்க அரசியல் கட்சிகள், தெளிவான இலட்சியமுள்ள அரசியல் கட்சிகள் இவைகள் எல்லாம் அ.தி.மு.க. தலைமைக்கு வந்தன. அதேபோல த.மா.கா. இரு கம்யூனிஸ்டு கட்சிகள், இந்திய தேசிய காங்கிரஸ், ஃபார்வர்டு பிளாக் போன்ற எல்லா அரசியல் கட்சிகளும் வந்துவிட்டன. தி.மு.க. கூட்டணி கூடாரம் காலியாகிக் கொண்டே போகிறது.

அதுமட்டுமல்ல; கொஞ்சம் - நஞ்சம் இருப்பவர்களையும் அவர்களுடைய குடும்ப அரசியல் விட்டு வைக்கவில்லை. தி.மு.க. கூட்டணியிலிருந்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருமே ஒப்பாரி வைக்கக்கூடிய அளவிற்கு ஆளானார்கள். அவர்கள் வெளியேறினார்களா? அல்லது வெளியேற்றப் பட்டார்களா? என்று பொது மக்களிடையே ஒரு பெரிய பட்டிமன்றம் நடக்கின்றது. தி.மு.க.வினர் கூட்டணிக் கட்சியில் இருந்தவர்களை வெளியேற்றினோம் என்று சொன்னார்கள். அதன் பிறகு அவர்களாக வெளியேறிவிட்டார்கள். நாங்கள் வெளியேற்றவில்லை என்று சொன்னார்கள். இப்படி எல்லாம் பேசப்பட்டது.

...... சிலர் கேட்கலாம் - அ.தி.மு.க. தானே பி.ஜே.பி.யைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தது என்று கேட்கலாம். அப்பொழுது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கலாம். கோவைக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக அத்வானி வந்திருந்தார். அப்பொழுது அ.தி.மு.க., பி.ஜே.பி.யுடன் கூட்டணி வைத்திருந்தது. அத்வானி என்ன பேசினார்? முதலில் தமிழ்நாட்டில் பி.ஜே.பி. சார்பில் நாங்கள் ஒரு கணக்குத் திறக்க வேண்டும் என்று பேசினார்.

ஆனால், அ.தி.மு.க. கூட்டு சேர்வதற்கு முன்னால் தி.மு.க. தலைவர் என்ன பேசினார்? மாறன் என்ன பேசினார்? பி.ஜே.பி. என்பது ஒரு தீண்டத்தகாத கட்சி அல்ல என்று பேசினார். பி.ஜே.பி.யோடு யாரும் சேரலாம் என்று சொன்னார்.

### ஒரு மணி நேரம்கூட பதவியை விட முடியாது

தி.மு.க. தலைவர் ஒரு கோடி கையெழுத்து மதச்சார்பின்மைக்காக வாங்கினார். கம்யூனிஸ்டு, த.மா.கா. போன்ற எல்லா இயக்கங்களும் சேர்ந்து கையெழுத்துக்கள் வாங்கின. இந்த ஒரு கோடி கையெழுத்தில் முதல் கையெழுத்து யார் போட்டதென்றால் மதிப்பிற்குரிய தி.மு.க. தலைவர்தான் முதல் கையெழுத்து போட்டார். இன்றைக்கு அவர் எந்த கோடியில் இருக்கின்றார் என்றே தெரியவில்லை.

பி.ஜே.பி. என்ற அக்டோபசிடம் மாட்டக் கூடாது. இந்த மலைப்பாம்புடன் மாட்டக் கூடாது என்று இடையறாமல் சொல்லிக் கொண்டு வந்தோம். அந்த அம்மையாரைப் பொறுத்த வரையில் பாராட்ட வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. அ.தி.மு.க., பி.ஜே.பி.யிடம் சண்டை போட்டது. காவிரி பிரச்சினைக்கு ஒன்றும் செய்யவில்லை. 69 சதவிகிதத்திற்கு ஒன்றும் செய்யவில்லை என்று சண்டை போட்டுக் கொண்டு பி.ஜே.பி. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியே வந்தது.

அப்பொழுதே நாங்கள் சொன்னோம் - பார்த்தீர்களா? இந்த கொள்கை உங்களுக்குச் சரியாக ஒத்து வராது என்று சொன்னோம். 1999 ஆம் ஆண்டு சென்னை, கடற்கரையில் நடைபெற்ற பிரமாண்டமான மாநாட்டில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா சொன்னார்.

"என்னுடைய வாழ்நாளில் அரசியலில் மிகப் பெரிய தவறு செய்து விட்டேன். பி.ஜே.பி.யோடு அ.தி.மு.க. கூட்டணி சேர்ந்ததுதான் அந்தத் தவறு என்று சொன்னார்கள்.

இந்தத் தவறை இனிமேல் செய்ய மாட்டேன் என்பது மட்டுமல்ல; அந்த மதவெறிக்கு தமிழ் மண்ணில் இடமில்லை. அந்த மதவெறியை ஒழிப்பதுதான் எங்களுடைய பணி. அதில் அ.தி.மு.க. தெளிவாக இருக்கிறது என்று அன்றைக்கு சொன்னார்கள்.

பி.ஜே.பி.க்கு இனி தமிழ்நாட்டில் இடமில்லை என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பிரகடனப்படுத்தினார். (பலத்த கைதட்டல்) அப்பொழுது தான் மதச்சார்பற்ற கூட்டணியே உருவானது. 1998 இல் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் அக்டோபஸ் என்று சொன்னது தி.மு.க. இரண்டு திராவிட இயக்கங்களில் ஒன்று எதிர்க்கட்சி, மற்றொன்று ஆளுங் கட்சி.

நாம் எப்பொழுதும் கறுப்பு, சிவப்போடு இருக்க வேண்டும். இதிலே போய் காவி கலர் கலந்தால் சாயம் போய் விடும். அ.தி.மு.க.வை அரசியல் ரீதியாக சந்தித்திருக்க வேண்டும் தி.மு.க. தலைவர்.

ஆனால், தி.மு.க. தலைவர் என்ன செய்தார்? தனது மருமகனுக்குத் துணைப் பிரதமர் பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக பி.ஜே.பி.யை எதிர்த்து இதற்கு முன்பு எதை சொன்னாரோ அதை மறந்து தன்னுடைய கட்சி முடிவைப் பற்றிக்கூட கவலைப்படவில்லை. உடனே பி.ஜே.பி.யுடன் தி.மு.க. கைகோர்த்துவிட்டது. மாறன் அவர்களுக்கு அமைச்சர் பதவி கிடைத்தது.

தி.மு.க. தன்னுடன் இருந்த தமிழ் மாநில காங்கிரசை கைவிட்டுவிட்டது. இன்னும் கேட்டால் ஜெயின் கமிஷன் தி.மு.க. மீது குற்றம் சுமத்தியது. இதற்காக தமிழ் மாநில காங்கிரஸ் அமைச்சர்கள் உட்பட எல்லோரும் ராஜினாமா செய்துவிட்டு வந்தார்கள். கொஞ்ச நாள் அமைச்சரவையிலிருந்து விலகியிருங்கள் என்று தி.மு.க.விடம் அன்றைய பிரதமர் அய்.கே.குஜ்ரால் கேட்கின்றார். ஜெயின் கமிஷன் முதல் அறிக்கை தான் இது. இறுதி அறிக்கை வரட்டும். நீங்கள் கொஞ்ச நாள் பதவியிலிருந்து விலகியிருங்கள் என்று கேட்டார். நமது அமைச்சரவைக்கு ஒன்றும் ஆபத்து வராது என்று குஜ்ரால் கேட்டார். அப்பொழுது தேசிய முன்னணி என்ற அமைப்பின் கீழ்தான் எல்லோரும் இருந்தார்கள்.

அப்பொழுது தி.மு.க. தலைவர் சொன்னார், ஒரு மணி நேரம் கூட மத்திய அமைச்சரவையிலிருந்து விலக மாட்டோம் என்று அறிவித்தார். அதனால்தான் அய்.கே. குஜ்ரால் அரசு கவிழ்ந்தது. பிறகு வாஜ்பேயி அரசு வர முடிந்தது. இவர்கள் விலகியிருந்தால் ஒரு தேர்தலே வந்திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. இது அரசியல் தெரிந்தவர்களுக்கு வரலாறு தெரிந்தவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும்.

### வரலாற்றை எப்படி வேண்டுமானாலும் மாற்றுவார்

சென்ற ஆண்டு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி என்ன சொன்னார்? ஆர்.எஸ்.எஸ்.சும், திராவிடர் கழகமும் ஒன்று என்று சொன்னார். எவ்வளவு குழப்பம் அவருக்கு? எங்கேயாவது புதிதாக கட்சியில் சேர்ந்தவர் சொல்லியிருந்தால் சரி.

ஆனால், நான் தான் திராவிடர் கழகக் கொடியை உருவாக்க என்னுடைய உடம்பில் உள்ள இரத்தத்தைக் குத்தி எடுத்து வடிவமைத்தேன் என்று சொன்னார். பாவம், நேற்றுதான் தவமணிராசன் அவர்கள் இறந்து போனார். ஈரோடு சண்முக வேலாயுதம் அவர்கள்தான் திராவிடர் கழகக் கொடியை முதன்முதலில் உருவாக்கினார். மறைந்த தவமணிராசன் அவர்கள்கூட இதைப் பற்றி சொல்லியிருக்கின்றார்.

கலைஞர் அவர்கள் வரலாற்றை எப்படி வேண்டுமானாலும் எழுதுவார். ஆனால், எப்படி இருந்தாலும், வாதத்திற்காக வைத்துக் கொள்ளுங்கள். இவ்வளவு பெரிய கொள்கை தெரிந்தவர். இவர் போய் ஆர்.எஸ்.எஸ்.சும் திராவிடர் கழகமும் ஒன்று என்று சொல்லலாமா?

கலைஞர் இப்படி சொன்னவுடனே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் மூப்பனார் அவர்கள் இதைக் கண்டித்தார். அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இதைக் கண்டித்தார். இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகள் மற்றும் பல்வேறு கட்சிகளும் தி.மு.க. தலைவருடைய பேச்சைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டன.

திராவிடர் கழகம் எப்படிப்பட்ட இயக்கம்? அந்த இயக்கத்தோடு ஒப்பிடலாமா? என்று கேள்வி கேட்டவுடனே கடைசியாக தி.மு.க. தலைவர் ஒரு பல்டி அடித்தார்.

பத்திரிகைக்காரர்கள் தவறாகப் போட்டு விட்டார்கள். சரியாகப் போடவில்லை என்று பதில் சொன்னார்.

### சாதியை அரவணைத்தவர்

*2001 சட்டமன்றத் தேர்தலில் சாதிக் கட்சிகளுடன் தி.மு.க. கூட்டணி வைத் திருந்ததை எதிர்த்து கி.வீரமணி பேசியது:*

மழைக் காலத்து காளான்கள் மாதிரி. இந்த ஜாதிக் கட்சிகள் மீது தி.மு.க. தலைவர் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை வந்தது. தி.மு.க. தலைவர்சட்டமன்றத்திலேயே சொன்னார் - எதிர்க்கட்சிகளைப் பார்த்தே சொன்னார்.

"தயவுசெய்து நீங்கள் யாரை வேண்டுமானாலும் ஆதரியுங்கள். இந்த சாதிக் கட்சிகளை மட்டும் ஊக்கப் படுத்தாதீர்கள். உற்சாகப்படுத்தாதீர்கள். ஆதரவு கொடுக்காதீர்கள் என்றெல்லாம் சொன்னார். செய்தியாளர்கள் தி.மு.க. தலைவரிடம் கேள்வி கேட்கின்றார்கள்: நீங்கள் சாதிக் கட்சிகளோடு கூட்டு சேருகின்றீர்களே என்று கேள்வி கேட்டதற்கு அவர் பதில் சொன்னார் - நான் ஜாதிக் கட்சிகளோடு கூட்டு சேரவில்லை. "சாதிக் கட்சிகளை ஊக்கப்படுத்தவில்லை. அதை அரவணைக்கின்றேன்" என்று சொன்னார். இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம்? நீங்கள் நன்றாக சிந்திக்க வேண்டும்.

(4 ஆம் பக்கம்)

# கலைஞர் கருணாநிதியின் நள்ளிரவு கைதை வரவேற்ற வீரமணி

*முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, மேம்பாலம் ஊழல் தொடர்பாக கலைஞர் கருணாநிதியை கைது செய்த போது தமிழின உணர்வாளர்கள் கொதித்து கைதை கண்டித்தார்கள். ஆனால், கி.வீரமணி, கைதை ஆதரித்தார். ஜெயா தொலைக்காட்சி அப்போது ஒளிபரப்பிய காட்சிகளை பெரியார் திடலிலே கூட்டம் போட்டு, காட்சிப் பதிவுகளைக் காட்டி, கருணாநிதியைக் கண்டித்தார்.*

*தொடர்ந்து 13.7.2001 இல் மதுரையில் திராவிடர் கழகம் நடத்திய மாநட்டில் இது குறித்து கி.வீரமணி நிகழ்த்திய உரையை திராவிடர் கழகம் `எனது மரணசாசனம்' எனும் தலைப்பில் நூலாக வெளியிட்டது. அதிலிருந்து சில பகுதிகள்:*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல் வாய்ந்த பொதுச்செயலாளர் அவர்கள் நிச்சயமாக பி.ஜே.பி. கூட்டணி நிலையிலே இருந்து மாறுவார்கள் என்ற நம்பிக்கை மற்றவர்களுக்கு இருந்தாலும், இல்லாவிட்டாலும் எங்களைப் போன்று நன்றாகப் புரிந்தவர்களுக்கு உண்டு. எனவே, அவர்கள் ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளாகவே பி.ஜே.பி. கூட்டணியிலிருந்து வெளியே வந்தார்கள்.

வெளியே வந்தது மட்டுமல்ல; வேறு எந்தவொரு அரசியல் கட்சித் தலைவருக்கும் இல்லாத துணிச்சலான கருத்து ஒன்றை சொன்னார். சென்னை - கடற்கரையிலே இலட்சோப இலட்சம் மக்களைக் கூட்டி வைத்துக் கொண்டு அவர்கள் முன்னாலே சொன்னார்.

“நான் அரசியலிலே ஒரு பெரிய தவறு செய்து விட்டேன். அதன் காரணமாகத்தான் பி.ஜே.பி. என்ற மதவெறிக் கும்பலோடு நாங்கள் கூட்டு சேர்ந்தோம். நாங்கள் கணக்குத் திறப்பதற்குக்கூட ஓரளவுக்குக் காரணமாக இருந்தோம். அது என்னுடைய வாழ்நாளிலே அரசியலிலே செய்த மிகப் பெரிய தவறு. ஆனால், இனிமேல் என்னுடைய வேலை பி.ஜே.பி. கூட்டத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் அகற்றுவதுதான் என்னுடைய வேலை என்பதை அவர்கள் மக்களிடையே பிரகடனப்படுத்தினார்கள்” - இது இரகசியப் பேச்சல்ல.

அந்த நேரத்தில் உண்மையாகவே பெரியார் வழி வந்தவர்களாக இருந்தால், அண்ணா வழி வந்தவர்களாக இருந்தால், நீங்கள் பி.ஜே.பி.யை ஒரு ஆக்டோபஸ் என்று சொன்னீர்களே, வாஜ்பேயி ஒரு மூகமூடி என்று சொன்னீர்களே, அத்வானி ஒரு நாகரிகமான முகமூடி என்று சொன்னீர்களே நீங்கள் போய் அதே பி.ஜே.பி.யுடன் கூட்டு சேரலாமா ?

அ.தி.மு.க., பி.ஜே.பி.யுடன் கூட்டணி சேர்ந்ததற்கு அ.தி.மு.க.விற்கு பெரியார், அண்ணா பெயரை உச்சரிப்பதற்கு எந்தத் தகுதியும் இல்லை என்று சொன்ன திராவிட முன்னேற்றக் கழகத்தினரே நீங்கள் என்ன ஆனீர்கள் ?

நீங்கள் கொள்கை உள்ளத்தோடு நின்றிருந்தால் எந்தப் பக்கத்திலும் அந்தப் பி.ஜே.பி.க்குத் தமிழ்நாட்டிலே கால் ஊன்றுவதற்கு இடமே இருந்திருக்காது. ஆனால், என்ன செய்தீர்கள் ? இதைவிட வேறு நல்ல வாய்ப்புக் கிடையாது என்று நினைத்தீர்கள். நீங்கள் உங்கள் கட்சியைக் கூட்டவில்லை. உங்களுடைய பொதுக் குழுவைக் கூட்ட வில்லை. ஜனநாயகம் என்று வாய் கிழிய பேசிக் கொண்டிருக் கின்ற நீங்கள் ஏற்கனவே முடிவெடுத்துவிட்டு அந்த முடிவுக்கு ஒரு ஒப்புதலைப் பெறத்தான் நினைத்தீர்களே தவிர, அந்த முடிவை ஏற்றுக் கொள்ளும் படியாகத்தான் செய்தீர்களே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் களுடைய எண்ணங்களை, முடிவுகளைக்கூட நீங்கள் கேட்கத் தயாராக இல்லை.

ஏனென்றால், அதுதான் உங்களுடைய முடிவுக்கு ஒரு முடிவு கட்டப் போகிறது என்று அன்றும், இன்றும் உங்களுக்குத் தெரியாது. வரலாறு மேலும் சரியாகத் தீர்ப்பளிக்கப் போகிறது.

மிகப் பெரிய கறையை உங்களுடைய கட்சியில் நீங்கள் உண்டாக்கிக் கொண்டீர்கள்.

ஆனால், இதற்கு காரணமென்ன ? தன் பெண்டு, தன் பிள்ளை, தன் குடும்பம் என்பதை மட்டுமே நினைத்தீர்கள். உங்களுக்கு இரண்டு வகையான ஆசை. ஒன்று இங்கே இருக்கின்ற ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வது மட்டுமல்ல. தன்னுடைய குடும்பத்தைச் சார்ந்தவர் இந்தியாவினுடைய துணைப் பிரதமராக வர மாட்டாரா ? இதான் அவர்களுக்கிருக்கின்ற ஆசை. ஆகவே, பி.ஜே.பி.யுடன் கூட்டு சேர்வதற்கு நீங்கள் யாரையும்கேட்கவில்லை.

..... கடந்த 5 ஆண்டுகாலத்திலே மிக முக்கியமான பணியை தி.மு.க. தலைவர் எதை செய்தார் ? அன்றைய முதலமைச்சர் திருவாளர் கருணாநிதி அவர்கள். ரொம்ப இலாவகமாகச் சொன்னார்.

பொது மக்களே நீங்கள் எங்களுக்கு உத்தரவு கொடுத்திருக்கின்றீர்கள். என்ன ? ஜெயலலிதா அவர்கள் மீது வழக்கு போடுவது என்று - வேறு எதையும் பொதுமக்கள் தேர்தல் அறிக்கையில் கேட்கவில்லை. நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றீர்கள். எனவேதான் ஜெயலலிதா மீது வழக்கு போடுகின்றோம் என்று சொல்லி 46, 47 வழக்குகளைப் போட்டிருக்கின்றார்கள். தொடர்ச்சியாக வழக்கு, வழக்கு என்று போட்டுக் கொண்டிருந்தார்கள்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களை கைது செய்தார். சிறையில் வைத்தார். அப்பொழுதுகூட ஒரு அறிக்கை எழுதினோம். ஆத்திரப்படக்கூடிய தி.மு.க. தலைவருக்கு தெரிவித்துக் கொள்கிறோம் - பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம். ஒரு சார்பு நிலையை திராவிடர் கழகம் ஒரு போதும் எடுக்காது. நடுநிலையில் இருந்து சொல்லுகின்றோம். அந்த நடுநிலை பல பேராலே பாராட்டப்படுகின்றதா - இல்லையா ? என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை.

எங்களுக்குச் சரி என்பதை எடுத்துச் சொல்லுகின்றவன் தான் பெரியார் தொண்டனே தவிர, யாருக்காகவும் என்னுடைய கருத்தை மாற்றிக் கொள்ளாதவன் தான் பெரியார் தொண்டன். ஆகவே அந்த அடிப்படையிலே அப்பொழுது நான் சொன்னேன்.

ஒரு தவறான முன்மாதிரியை நீங்கள் உருவாக்குகின்றீர்கள்.

ஒரு ஆட்சி நடக்கின்றபொழுது எந்த முதலமைச்சர் வந்தாலும் ஃபைலிலே கையெழுத்துப் போடக்கூடிய நிலை வரும். அமைச்சர்கள் போடுகிறார்கள். அலுவலர்கள் போடுகிறார்கள். ஆகவே முதலமைச்சர், அமைச்சர், அதிகாரிகள் எல்லோர் மீதும் வழக்கு போடுகிற ஒரு தவறான முன் மாதிரியை உருவாக்கி விட்டீர்கள். அவர்களை எல்லாம் கைது செய்து உள்ளே போடுகின்றீர்களே அது எங்கே போய் நிற்கும் ? இது எங்கே போய் முடியும் ? இது ஒரு தவறான முன் மாதிரி ஆகாதா என்றுஅப்பொழுதே கேட்டோம். நாங்கள் சொல்வதை அவர் கேட்கவில்லை. உடனே தி.மு.க தலைவர் 5 இலட்சம் பேசுகிறது என்று சொன்னார்.

என்னுடைய வாதத்தை சந்திக்க முடியாதவர்கள். என்னைத் தனிப்பட்ட முறையிலே கொச்சைப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்றார்கள். நான் அதைப் பற்றிக் கவலைப்படாதவன். ஆனால், அவருக்கு என்ன பெயர் ? எனக்கென்ன பெயர் என்று எல்லோருக்கும் தெளிவாக தெரியும்.

சர்க்காரியா என்னைப் பார்த்து விஞ்ஞான பூர்வமாக ஊழல் செய்தவன் வீரமணி என்று சர்டிஃபிகேட் கொடுக்கவில்லை. ஆகவே நான் அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. நான் பெட்டி வாங்கிக் கொண்டு பேசுகின்றேன் என்று தி.மு.க. தலைவரே முரசொலியில் கார்ட்டூன் போடுகின்றார். மணி என்பது அவருடைய பெயரிலேயே இருக்கிறது என்று சொல்லுகின்றார்.

இவ்வளவையும் அவர்கள் சொன்ன நேரத்திலே நான் ஒரு கேள்வி கேட்டேன். இதுவரை அந்தக் கேள்விக்கு அவர் பதில் அளிக்கவில்லை. சரி. உங்களை ஏறத்தாழ 23 ஆண்டுகாலம் ஆதரித்தோமே- நீங்கள் அதற்கு எத்துணை முறைபெட்டிக் கொடுத்தீர்கள் ? எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்ற கணக்கை தயவு செய்து வெளியிடுங்கள். இதை வெளியிடக் கூடிய தெம்போ, திராணியோ, தைரியமோ உங்களுக்கு உண்டா ?

...... ஒரு பொதுத் தலைவரை கைது செய்யும்பொழுது கிளர்ச்சிகள், தேவையற்ற அடிதடிகள், அசம்பாவிதங்கள், துப்பாக்கிச் சூடுகள் இவைகள் எல்லாம் நடக்கும் என்று எண்ணித்தான் இரவிலே கைது செய்தார்கள். கைது செய்வார்கள். பெரிய தலைவர்களை கைது செய்யும்பொழுது நீண்டகாலமாக இருக்கின்ற நடைமுறை இதுதான். இதை நான் நியாயப்படுத்துவதற்காக சொல்லவில்லை.

எத்தனையோ தலைவர்களை இப்படி எத்தனையோ முறை கைது செய்திருக்கிறார்கள். போலீசார் அழைத்தவுடன் வந்திருந்தால் இந்த மாதிரியான பிரச்சினைகளுக்கெல்லாம் இடம் உண்டா ?

இவர் வீட்டிற்குள்ளேயே இருந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் செல்ஃபோனில் தகவல் கொடுக்கின்றார் சன் டி.வி.க்கு, மாறனுக்கு. இதற்குரிய ஆதாரங்கள், தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் - முரசொலியிலே வந்த செய்திகள் - இப்படி கத்தை, கத்தையாக என்னிடத்திலே ஆதாரங்களாக உள்ளன.

எந்த அரங்கத்திலே வேண்டுமானாலும் நான் வாதாடுவதற்குத் தயாராக இருக்கின்றேன். தி.மு.க. தலைவர் அவருடைய வழக்கறிஞர் சண்முகசுந்தரத்திடம் தொலைபேசியிலே பேசினேன் என்று சொல்லுகின்றார்.

தி.மு.க. தலைவர் எதிர்பார்த்த சன் டி.வி. வரவேண்டும். அவருடைய மருமகன் மத்திய அமைச்சர் மாறன் வரவேண்டும். அதற்காக அவரை அழைத்துக் கொஞ்சம் சரளமாகப் பேசுகின்றார்கள். அதை எல்லாம் போலீஸ் டி.வி.யிலே, ஜெயா டி.வி.யிலே காட்டியிருக்கின்றார்கள்.

தி.மு.க. தலைவரிடம் ரொம்ப மரியாதையாகத்தானே காவல்துறையினர் சொல்லுகின்றார்கள். எதற்காக வந்திருக்கின்றீர்கள் என்று இவர் கேட்கிறார்.அய்யா உங்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது என்று சொல்லுகின்றார்கள். இதற்கு அரஸ்டு கார்டு என்பதைக் கொண்டு போனாலே போதும்.

மற்றவர்கள் பொத்தாம் பொதுவில் சொல்லுகின்றார்கள். போலீசார் வாரண்டே இல்லாமல் போயிருக்கிறார்கள் என்று; இங்கே பல வழக்கறிஞர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். இதோ குற்றவியல் நடைமுறைச் சட்டம் இருக்கிறது. இதிலே மிக முக்கியமான ஒரு பகுதி இருக்கிறது. நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால், இது 41-ஆவது விதி. வாரன்ட் இல்லாமல் ஒரு குற்றத்தில் கைது செய்யலாம் என்றிருக்கிறது. பதினான்கு வருடம் முதலமைச்சராக இருந்த தி.மு.க. தலைவருக்கு இது தெரியாதா ?

இது சட்டவிரோதமா ? இல்லை. கலைஞர் கருணாநிதி என்பவர் ஒருவர் வருவார். அவருக்காகவே இப்படி ஒரு சட்டத்தை எழுதி வைத்திருக் கின்றார்களா ?

போலீஸ் அதிகாரி சொல்லுகின்றார். அய்யா உங்கள் மீது மேம்பாலம் கட்டியதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லுகின்றார்.

உடனே, முன்னாள் முதல்வர் தி.மு.க. தலைவர் கேள்வி கேட்கின்றார். பாலம் நானா கட்டினேன் ? என்று.

பொது மக்களே இனிமேல் உங்களுடைய பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுங்கள். தாஜ்மகாலை யார் கட்டியது என்றால், ஆக்ராவிலே இருந்த கொத்தனார் என்று சொல்லிக் கொடுங்கள். (பலத்த கைதட்டல்)

*4 ஆம் பக்கம்*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘ஜெ.’ மீதான ஊழல் வழக்குகளை எதிர்த்தவர் வீரமணி

*(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நாம் எல்லாம் தமிழர்கள்தான். தமிழ்மொழி நம்முடைய தாய்மொழி தான். ஊக்கப்படுத்துவது என்றால் என்ன? அரவணைப்பது என்றால் என்ன? ஊக்கப்படுத்துவது என்றால் தூரத்திலிருந்து செய்வது. அரவணைப்பதைப் பற்றி சிந்தித்தால் கொஞ்சம் அசிங்கமான அர்த்தம் அதில் வரும் (பலத்த கைதட்டல்). நான் அந்த அளவுக்கெல்லாம் போக விரும்பவில்லை. வார்த்தை விளையாட்டில் ரொம்ப கெட்டிக் காரர் அவர்.

பத்திரிகையாளர் அவரிடம் கேள்வி கேட்கின்றார்கள். இது ‘சாதிக் கூட்டணி’ என்று சொல்லுகின்றார்களே என்று கேள்வி கேட்கின்றார்கள். இது சாதிக்கும் கூட்டணி என்று கலைஞர் பதில் சொன்னார். சாதிக்கும் கூட்டணிக்குத்தான் 37 இடங்கள் கிடைத்திருக்கின்றன. *(சிரிப்பு, கைதட்டல்)*

என்னிடம் பத்திரிகையாளர் கேள்வி கேட்டார்கள். நாங்கள் எல்லாம் ஒரே பள்ளிக்கூடத்தில், ஒரே குருகுலத்தில் படித்தவர்கள். அவர் வார்த்தை விளையாட்டு விளையாடுவார். நாங்களும் வார்த்தை யிலேயா பதில் சொல்ல முடியும்?

முன்பு மதத்துடன் கூட்டணி - இப் பொழுது சாதியுடன் கூட்டணி

ஏற்கனவே அவர் வைத்திருந்தது மதத்திற்கும் கூட்டணி - இப் பொழுது கூட்டு சேர்ந்திருப்பது சாதிக்கும் கூட்டணி. அவ்வளவுதான் என்று பதில் சொன்னோம்.

*(மூன்று ஆண்டு தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப் பட்டன. அப்படி தள்ளுபடி செய்யப் பட்டதையும் வீரமணி கண்டித்து இவ்வாறு பேசினார்.)*

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய வேட்பு மனுக் களைத் தள்ளிவிட்டார்களே என்று கேட்டார்கள்.

நான் பதில் சொன்னேன் - வேட்பு மனு தள்ளாமல் இருந்தால் இரண்டு இடத்தில் போட்டி போடுவார்கள். இப்பொழுது வேட்பு மனுவை தள்ளுபடி செய்ததால் 234 தொகுதி யிலும் அந்த அம்மையார்தான்வேட்பாளர். அதில் ஒன்றும் சந்தேகமில்லை.

*..... ஜெயலலிதா மீது தொடரப்பட்ட ஊழல் வழக்குக்காக கருணாநிதியைக் கண்டித்து கி.வீரமணி இவ்வாறு பேசினார்:*

இப்பொழுது அ.தி.மு.க. ஆட்சி பதவி ஏற்றிருக்கின்றது. இந்த 69 சதவிகித இட ஒதுக்கீடு பற்றிய வழக்கு உச்சநீதிமன்றத்தில் இருக்கிறது. 69 சதவிகித இடஒதுக்கீடுக்கு சட்டப் பாதுகாப்பு உண்டு. இதை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை இன்னும் ஒரு சில மாதங்களிலே நீங்கள் பார்க்கப் போகின்றீர்கள்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் அய்ந்து வருடம் ஆண்டாரே என்ன செய்தார்.? உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கின்றது. இந்த 69 சதவிகித இடஒதுக்கீட்டைப் பற்றி கலைஞர் கண்டு கொள்ளவில்லை. அ.தி.மு.க. ஜெயலலிதா அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை விரைவுபடுத் தினார்.தனி நீதிமன்றத்தை இதற்காக நியமித்தாரே தவிர மற்றவைகளைப் பற்றி இவர் கவலைப்படவில்லை.

நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தவனும் செத்துப் போய் விட்டான். வாதாடியவனும் செத்துப் போய்விட்டான். வழக்கை விசாரித்த நீதிபதியும் இறந்து போய்விட்டார். நீதிமன்றங்களில் வெள்ளி விழா கண்ட வழக்குகள் எல்லாம் இருக்கின்றது. அதே மாதிரி பொன் விழா வழக்குகள் எல்லாம் இருக்கின்றது.

ஆனால் இந்த அம்மையார் மீது மட்டும் வழக்குகள் தீவிரப்படுத்தப் பட்டன. தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்த பொழுது சொத்து சேர்க்கப் பட்டது என்று முதல் நாள் வழக்குப் போடுகின்றார்கள். அடுத்த நாள் பார்த்தீர்களேயானால், அதெல்லாம் ஒன்றுமில்லை என்று தீர்ப்பு வருகிறது.

அதே மாதிரி மறுபடியும் விசாரிப்பார்கள். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை (பலத்த கைதட்டல்). நான் பொது நியதி அடிப்படை யில் இருந்து சொல்லுகின்றேன். நான் ஒன்றும் பழி வாங்க வேண்டும் என்ற அடிப் படையில் சொல்லவில்லை. பொது நியதியை வைத்து சொல்லுகின்றோம்.

திறந்த சிலைச்சாலைகளை மூடியதாக வரலாறே இல்லை. திறந்த போலீஸ் ஸ்டேசன்களை மூடியதாக வரலாறு இல்லை. திறந்த தனி நீதிமன்றங்களை மூடுவதாகவும் வரலாறு இருக்காது. (பலத்த கைதட்ல்)

என்ன ஒரு மாறுதல்? சென்ற ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் கள் - இந்த முறை போவார்கள் (பலத்த கைதட்டல்). மாறி மாறி வரு வார்கள். கட்சிகள் மாறி, மாறி ஆட்சிக்கு வரவில்லையா, அந்த அடிப் படையில்தான் நான் சொல்லுகின்றேன். வேறு யார் மீதும் ஒரு குரோத உணர்ச்சியில் நான் இப்படிச் சொல்லவில்லை. (சிரிப்பு - கைதட்டல்) ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது ரொம்பத் தெளிவாக எடுத்து வைத்துச் சொல்ல வேண்டும். எனவே, அந்த அடிப்படையில் தான் மக்கள் இன்றைக்குத் தெளிவான தீர்ப்பைக் கொடுத்திருக் கின்றார்கள்.

தேர்தலில் தி.மு.க. கூட்டணி போட்டியிட்ட இடங்கள் 234. தி.மு.க. கூட்டணி வென்ற இடங்கள் 37. அதே மாதிரி அ.தி.மு.க. கட்சி மட்டும் போட்டியிட்ட இடங்கள் 140. இதில் 133 இடங்களில் தனித்தே வென்றார்கள். (பலத்த கைதட்டல்) இதுதான் மிக முக்கியம்.

– கி.வீரமணி உரையிலிருந்து

## தற்கொலைப் படை?

*அய்யா நினைத்ததை நீங்கள் (ஜெயலலிதா) செய்யும்போது பெரியார் தொண்டர்களாகிய நாங்கள் பாராட்டுகிறோம். இதிலென்ன வியப்பு? பெரியாரின் கொள்கைகளை உங்கள் ஆட்சி செய்கின்ற நேரத்திலே, உங்களுக்கு எதிர்ப்பு ஏற்படுமானால், எந்த இடத்தில் இருந்து எதிர்ப்பு ஏற்படுமானாலும், கருப்புச் சட்டைப் படை, தற்கொலைப் பட்டாளம், கருப்பு மெழுகுவர்த்தி - தங்களை அழித்துக் கொண்டு சமுதாயத்திற்கு ஒளி கொடுப்பவர்கள் என்றென்றைக்கும் அவற்றை முறியடித்து ஆட்சிக்கு உறுதுணையாக இருப்போம் என்று இந்த மாபெரும் மக்கள் மன்றத்தின் முன்னாலே நான் சொல்ல விழைகிறேன்.*

**– கி. வீரமணி – ‘விடுதலை’ 13, 14.3.1994)**

## தி.க.வுடன் தொடர்பு கூடாது

*திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் தளபதி வீரமணி அவர்கள் அண்மைக்காலமாக தி.மு.க.வைப் பற்றி கூட்டங்களில் பேசுவதும், அறிக்கைகள், பேட்டிகள் அளிப்பதும் - அவர் எடுத்துள்ள முடிவுக்கு சாதகமாக இருக்கக் கூடும். அதற்காக தி.மு.க. அவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டு இருக்க வேண்டுமென்று கட்டாயமில்லை.*

*பெரியாரின் சமுதாய மறுமலர்ச்சி கொள்கைகளை அண்ணா வழியில் நிறைவேற்றப் பணியாற்றுகிற நம்மைப் பற்றி வீரமணி அவர்கள் தொடர்ந்து மாறுபட்ட கருத்தை வெளியிட்டு வருவதால் இந்த விளக்கம் தரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே, தோழமை உணர்ச்சிக்கு இடமற்ற சூழலை விரும்பும் திராவிடர் கழகத்துடன் நமது கழகத்தோழர்கள் தொடர்பு கொள்ள வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.”*

**– தி.மு.க. வெளியிட்ட அறிக்கை ‘முரசொலி’ 20.9.1987**

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

தயவு செய்து மும்தாஜ், ஷாஜகான் பெயரைச் சொல்லாதீர்கள்.

இந்த மாதிரி பிரச்சினைகள் வரும் என்பதால்தான் நான் 5 வருடத்திற்கு முன்னாலேயே அறிக்கை கொடுத்திருக்கிறேன். நான் பெரிய தீர்க்கதரிசி என்பதற்காக அல்ல. எப்படி எப்படி இவைகள் எல்லாம் மாறும் என்பதற்காக.


முதலமைச்சர் என்ற முறையிலே நீங்கள் (கருணாநிதி) வழக்குப் போடுவதற்கு கையெழுத்து போட்டால் இது எல்லா முதலமைச்சர்களுக்கும் சங்கடத்தை உருவாக்கும் என்று சொன்னோம். அன்றைக்கு என்ன செய்தார்கள்? அரசாங்க உத்தரவைத் திருத்தினார்கள். அல்லது அதற்கு அனுமதி கொடுத்தார்கள். ஆகவே கையெழுத்துப் போட்ட அதிகாரிகள் மீது வழக்கு; கையெழுத்துப் போட்ட அமைச்சர்கள் மீதும் வழக்கு என்று போட்டீர்கள். இப்பொழுது அதே நிலைதான் திரும்பி வந்திருக்கிறது.

– கி.வீரமணி உரையிலிருந்து

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th May 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு


ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மே 21, 2009 புரட்சி 8 முழக்கம் 19 விலை : ரூ.2.50


## இனப்படுகொலையை மறைக்க

# சிங்கள – பார்ப்பன சூழ்ச்சி நாடகம்!

பல்லாயிரக்கணக்கில் அப்பாவித் தமிழர்களை அழித்தொழிக்க இறுதி முடிவு எடுத்துவிட்ட சிங்கள ராணுவம் - அதை சர்வதேசப் பார்வையிலிருந்து திசை திருப்ப நாடகமாடுகிறது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், முன்னனி தளபதிகள் கொல்லப் பட்டு விட்டார்கள் என்றும், போர் முடிந்து விட்டது என்றும் அறிவித்து, சர்வதேச தலையீட்டை தடுத்து நிறுத்த முயற்சிக்கிறது.

பிரபாகரன் உயிருடன் இருக்கிறார், வதந்திகளை நம்ப வேண்டாம் என்று விடுதலைப் புலிகள் அதிகாரபூர்வமாக அறிவித்துவிட்டனர். அதன் சர்வதேச பொறுப்பாளர் பத்மநாபா செல்வராசா இதை அறிவித்துள்ளார். ஆனால் பல்வேறு முன்னணி தளபதிகள், வீரமரணத்தை தழுவியிருக்கலாம். இந்தப் போராளிகள் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிரை இழக்க உறுதி கொண்டு இயக்கத்துக்கு வந்தவர்கள். இதுவரை ஆயிரக்கணக்கான விடுதலைப் புலிகள் உயிரைத் தந்து மாவீரர் களாகியுள்ளனர். போராட்டம் உறுதியாகத் தொடருகிறது. இப்போது முதன்மையாகக் கவலைக் கொள்ள வேண்டிய பிரச்சினை, சிங்கள ராணுவத்திடம் சிக்கியுள்ள மக்களின் உயிரைக் காப்பாற்றுவதுதான். 25000 பேர் மருந்தின்றி காயம் பட்டு, மரணத்தை சந்திக்கிறார்கள். 30000 மக்கள் எரித்துக் கொல்லப்படவிருக்கிறார்கள்.



உலக வரலாற்றில் நிகழ்ந்திடாத இந்தக் கொடுமையை சர்வதேச சமூகம் தடுத்து நிறுத்தவில்லை.

முன்னணித் தளபதிகள் வீரமரணத்தைத் தழுவியதால் போராட்டம் ஓய்ந்துவிடப் போவதில்லை. எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் அதற்கான நியாயங்கள் இருக்கும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதுதான் வரலாறு கூறும் உண்மை. ஈழத்தில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட் டத்தை ஆதரிப்போர் இதற்காக நிலை குலைந்து விடாமல் உறுதியான ஆதரவினை தொடர்ந்து வழங்குவதே இப்போதுள்ள கடமை.

தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன், ஏற்கனவே உளவு நிறுவனங்களால் பலமுறை சாகடிக்கப்பட்டவர் தான்.

1989 ஜூலை 24 ஆம் தேதி பிரபாகரன், மற்றொரு விடுதலைபுலி தளபதி மாத்தையாவால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற வதந்தியை பரப் பினார்கள். ‘இந்து’ நாளேடும் செய்தி வெளி யிட்டது.

2005 ஆம் ஆண்டு ஜன. 8 ஆம் தேதி சுனாமி பேரலையில் பிரபாகரன் இழுத்துச் செல்லப் பட்டு, மரணமடைந்துவிட்டதாக இலங்கை அரசு வானொலி அறிவித்தது.

‘இந்து’ நாளேடு செய்தி வெளியிட்டதோடு, தலையங்கமும் தீட்டியது. பிரபாகரனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்றே அப்போதும் கூறினார்கள்.

இப்போது மீண்டும் அதே புரளியை பார்ப்பன ஆங்கில ஊடகங்கள் மட்டுமின்றி, இந்திய அரசும் சேர்ந்து பரப்புகிறது. மானங்கெட்ட இந்த கும்பல்கள் மீண்டும் மூக்கறுபட்டுள்ளது.

மீண்டும் புலிகள் இயக்கம் உயிர்த்தெழும்; விடுதலைப் போர் மேலும் தீவிரமாகத் தொடங்கும்; இது காலம் உணர்த்தப் போகும் உண்மை!

# தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

காங்கிரஸ் கூட்டணி 261 இடங்களில் வென்று மீண்டும் ஆட்சி அமைக்கவிருக்கிறது. பாரதிய ஜனதா கட்சி 157 இடங்களையும், இடதுசாரிகள் உருவாக்கிய மூன்றாவது அணி 59 இடங்களையும், லாலு - பஸ்வான் - முலாயம் சிங்கின் சிங்கின் 4வது அணி 27 இடங்களையும் பிடித்துள்ளது. தமிழ் நாட்டில் புதுவை உட்பட தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி 28 இடங்களிலும், அ.தி.மு.க. கூட்டணி 12 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளது.

ஜனநாயகம் என்பது இந்தியாவில் பார்ப்பன நாயகமாகவே இருக்கிறது என்றார் பெரியார். பார்ப்பனியம் எப்போதுமே சமத்துவத்திற்கான வாய்ப்புகளை மறுக்கும்; தமிழ்நாட்டில் இப்போது நடந்து முடிந்திருக்கிற தேர்தல், ஜனநாயகத்தை விலைபேசி வாங்கிய தேர்தலேயாகும். இது தமிழ் நாட்டில் வாக்காளர் ஒவ்வொருவருக்கும் தெரிந்த செய்தி தான். வாக்காளர்களுக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கப்படுவதுபோல், தி.மு.க. அணி பணத்தை சிவகாசியில் அச்சடிக்கப்பட்ட கவர்களில் போட்டு வழங்கியது. வழமையாக 65 சதவீத வாக்குகள் பதிவாகும் தேர்தலில், இம்முறை 76 சதவீதம் வாக்குகள் பதிவானதற்கான ‘ரகசியம்’ இதுதான்.

10 சதவீத வாக்குகள் விலைக்கு வாங்கப்பட்டு வெற்றிகளை தட்டிப் பறித்துள்ளார்கள். தேர்தல் நேர்மையாக நடந்தது என்றோ, வாக்குகளுக்கு பணம் தரவில்லை என்றோ தி.மு.க. கூட்டணி வெளிப் படையாக அறிவிக்கவே முடியாது. அப்படி அறிவித்தால் மக்களே சிரிப்பார்கள்.

அரசு அதிகாரங்கள் முறைகேடாகப் பயன் படுத்தப்பட்டன. ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், அதிகாரிகள் முழு ஒத்துழைப்போடு 25 சதவீத கள்ள ஓட்டுகள் போடப்பட்டன. ஓட்டுப் பதிவு எந்திரங்களிலும் முறைகேடுகள் நடந்துள்ளன. கரூர் தொகுதியில் பெண்கள் முன்னணி என்ற அமைப்பின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் குடும்பத்தினர் பதிவு செய்த வாக்கு எந்திரத்தில் எண்ணிக்கையில் இல்லாமல் போயிருக்கிறது. எதிர்ப்பு தெரிவித்து சாலை மறியல் செய்த பெண்களை காவல்துறை கைது செய்துள்ளது. வைகோ போட்டியிட்ட விருதுநகர் தொகுதியில் மொத்தம் பதிவான வாக்குகள் எண்ணிக்கையை விட 22000 வாக்குகள் கூடுதலாக விழுந்திருக்கும் அதிர்ச்சியான தகவல் வெளிவந்துள்ளது. ப. சிதம்பரம் போட்டியிட்ட சிவகங்கை தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ராஜ கண்ணப்பன் வெற்றி பெற்றுவிட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அ.தி.மு.க. வேட்பாளர் ராஜ கண்ணப்பன் வெற்றி பெற்றுவிட்டதாக பி.டி.அய். செய்தி நிறுவனம். அறிவித்த பிறகு முடிவுகள் அறிவிப்பது நீண்ட நேரம் நிறுத்தி வைக்கப்பட்டு, இறுதியில் ப.சிதம்பரம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. அணியினர் வென்ற இடங்களில் அதிகாரிகள் வெற்றி பெற்ற சேதியை அறிவிப்பதற்கே நீண்ட நேரம் எடுத்துக் கொண்டனர்.

காங்கிரசுக்கு எதிர்ப்புப் பரப்புரை நிகழ்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே, கழகத்தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், ம.தி.மு.க. பிரச்சார செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோரை

(4 ஆம் பக்கம்)

# கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேட்டி

# கழகத்தின் செயல் உத்தியும்; போர் உத்தியும்

*தேர்தலில் பெரியார் திராவிடர் கழகம் ஜெயலலிதாவை ஆதரிப்பது ஒரு தற்காலிக நிலைப்பாடு; செயல் உத்தியை மட்டுமே மாற்றிக் கொண்டிருக்கிறோம்; போர் உத்தி அப்படியே இருக்கிறது என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'ஆனந்த விகடன்' (20.5.2009) ஏட்டுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். பேட்டி விவரம்:*

***தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசியதால் தானே நீங்கள் கைதானீர்கள்?***


'தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது குற்றமாகாது. ஆதரவாகச் செயல்படுவதுதான் குற்றம்' என்று முன்பு வைகோ, நெடுமாறன் ஆகி யோர் பொடாவில் கைது செய்யப்பட்ட போதே உச்சநீதிமன்றம் தெளிவாகத்தன் தீர்ப்பில் குறிப்பிட்டு இருக்கிறது. ஆனால், மறுபடியும் மறுபடியும் வெறும் பேச்சுக்காகக் கைது செய்யப்படு கிறோம். வைகோவின் பொடா வழக்கு விடுதலைக்காகத் தீவிரமாகக் குரல் கொடுத்த, செயலாற்றிய அதே கலைஞர்தான் இப்போது மூன்று பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்திருக்கிறார். ஒரே சட்டத்தை ஆளுங் கட்சியாக இருக்கும்போது ஒரு மாதிரியும், எதிர்க்கட்சியாக மாறினால் வேறு மாதிரியும் கையாள்கிறார் கலைஞர்!

**நீங்கள் தேர்தலில் பங்கேற்காத அமைப் பாக இருந்த போதிலும், காங்கிரஸ் கட்சி யைக் காயப்படுத்தும் சி.டி.யை வெளியிட்ட தால் தானே உங்கள் மீது கோபம் வந்தது?**

நாங்கள் தேர்தலில் பங்கேற்பது இல்லை. ஆனால் அரசியலைப் புறந்தள்ள முடியாது. நீங்கள் சொல்வது மாதிரி அது காங்கிரசுக்கு எதிரான சிடி என்பதைவிட ஈழத் தமிழனுக்கு ஆதரவான சிடி. ஒரு திட்டமிட்ட இன அழித் தொழிப்பு இலங்கைத் தீவில் மேற் கொள்ளப் படுகிறது. சிங்கள ராணுவம் தமிழர்களை விதவிதமான குண்டுகளால் கொலை செய்கிறது. பட்டினி போடுகிறது. கொட்டாங்குச்சிகளைக் கையில் ஏந்தியபடி ஒரு கவளம் சோற்றுக் காகவும், ஒரு குவளைத் தண்ணீருக்காகவும் தமிழர்கள் கையேந்தி முண்டியடிக்கிறார்கள். இந்த உண்மை களை எடுத்துச் சொல்வதில் என்ன பிழை? அதுவும் நாங்கள் தயாரித்திருந்த சிடியில் தொலைக் காட்சிகளில் ஒளி பரப்பான காட்சிகளைத் தான் தொகுத்திருந்தோம். அதையே கூடாது என்கிறார்கள். ஒரு கட்சிக்கு ஓட்டு போடுங்கள் என்று சொல்வது எப்படி ஜன நாயக உரிமையோ, அதுபோல இன்ன கட்சிக்கு ஓட்டு போடாதீர்கள் என்று சொல்வதும் ஜனநாயக உரிமைதான். ஆனால், கலைஞர் அரசு இந்த ஜனநாயகத்தை அடியோடு மறுக்கிறது.

***அதற்காக, கோவையில் ராணுவ லாரி களைத் தாக்கியதையும், ஆயுதங்களை எரித்ததையும் எப்படி நியாயப்படுத்து வீர்கள்?***

கோவைச் சம்பவத்தைத் தனியாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது. அது ஒட்டு மொத்த தமிழர் கொந்தளிப்பின் ஒரு துளி வெளிப்பாடு. உண்மையில், கோவையில் அன்று எங்கள் இயக்கத்தோழர்களின் எண்ணிக்கை 30 பேரோ, 40 பேரோதான். விஷயத்தைக் கேள்விப்பட்டு சாலையில் நின்றிருந்த வர்களும், பேருந்துகளில் அமர்ந்திருந்தவர்களும், கிராமத்து மக்களும் தோழர்களுடன் இணைந்து கொண்டனர். அந்த அளவுக்கு ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் இழைக்கும் இந்திய அரசாங்கத்தின் மீது



தமிழர்களுக்குக் கோபம் இருக்கிறது.

**புலிகள் மீது உங்களுக்கு விமர்சனங் களே இல்லையா...?**

விமர்சனங்கள் வைக்கலாம். ஆனால், அவை தூற்றுதல் ஆகிவிடக் கூடாது. இலங்கை விவகாரத்தில் தீர்வு காண முடியாத தற்கு சாக்காக ராஜீவ் கொலை பற்றி இன்று பேசும் சிலர், அந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னால் மட்டும் புலிகளை ஆதரித்துக் கொண்டு இருந்தார்களா... இல்லையே! சிங்கள அமைச்சரவையில் கனகரத்தினம் என்ற தமிழ் எம்.பி. இருந்தார். அவரது துரோகத்தால் புலிகள் அவரைச் சுட்டுக் கொன்றனர். ஆனாலும், அவரது மகன் சைமன் பிற்பாடு அதே புலிகள் இயக்கத்தில் சேர்ந்து, சிங்கள ராணுவத்துக்கு எதிராகப் போரில் மடிந்தார். ஆனால், கருணாநிதி விமர்சனம் என்ற பெயரில் 20 ஆண்டுகளுக்கு முன்பு பிரபாகரன் கொடுத்த பேட்டியைத் திரித்துப் பேசுகிறார். அந்தப் பேட்டிக்குப் பிறகுதான் அவரது தமிழீழ ஆதரவாளர் கூட்டமைப்பே வந்தது. ஆக, தன்னுடைய இயலாமையை பிரபாகரன் மீதான விமர் சனமாகக் கலைஞர் மாற்றுகிறார். தமிழ னுக்கு ஒரு நாடு அமைந்துவிடக் கூடாது என்று நினைப்பவர்கள், ஏதோ நியாய வான்கள் போல புலிகள் மீது பாய்கிறார்கள். விமர்சனங்கள் வைக்க வேண்டிய நேரம். இது அல்ல. சாவுக்கும் நோவுக்கும் மத்தியில் இயங்கிக் கொண்டு இருக்கும் இயக்கத்தைத் தத்துவார்த்தப் போர்வைக்குள் மூடி, அங்கு நடக்கும் சிங்களச் சித்ரவதைகளை மறைத்துவிடக் கூடாது. புலிகளை விமர்சிக்கக் காலம் இருக்கிறது. தமிழனைக் காப்பாற்ற இதுதான் கடைசி நேரம்.

**திராவிடர் கழகம் ஜெயலலிதாவை ஆதரிக்கிறது என்ற காரணத்தைச் சொல்லித் தான் பெரியார் திராவிடர் கழகமே உதயமானது. ஆனால், இப்போது ஈழப் பிரச்சினையில் கருணா நிதியை விமர்சிப்பது என்ற நிலையோடு சேர்ந்து நீங்களே ஜெயலலிதாவை ஆதரிப்பது சரியா...?**

தேர்தல் அரசியல் வழியாக அமைகிற எந்த அரசும் உழைக்கும் மக்களுக்கு விடிவை ஏற்படுத்தித் தராது என்று நாங்கள் தெளிவாக நம்புகிறோம். ஆனால், நடப்பில் தேர்தல் அரசியல் என்ற சீரழிந்த வடிவம் மட்டும்தான் நம்மிடம் இருக்கிறது. இதில் நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பே இல்லை. ஒப்பீட்டு அளவில் குறைந்த கேடுள்ளவர்களைத் தேர்ந் தெடுத்தாக வேண்டும். அப்படி ஈழப் பிரச்சினை யில் கருணாநிதியை விடக் குறைந்த கேடுள்ள வராக ஜெயலலிதாவை நினைக்கிறோம். ஜெய லலிதா நடிப்புக்காகத்தான் தனி ஈழம் அமைப் பேன் என்று சொல்கிறார் என்றே வைத்துக் கொண்டாலும், அதே நடிப்புக் காகக்கூட கருணாநிதி அந்த வார்த்தையை உச்சரிக்கத் தயாராக இல்லையே! எனவே தான், நாங்கள் ஒரு தற்காலிக நிலைப்பாடாக ஜெயலலிதாவை ஆதரிக்கிறோம். செயல் உத்தியை மட்டுமே மாற்றிக் கொண்டு இருக்கிறோம். போர் உத்தி அப்படியேதான் இருக்கிறது.

**தி.க.வுக்கும், பெரியார் தி.க.வுக்கும் என்ன வேறுபாடு?**

நாங்கள் மக்களிடம் சாதி வேறுபாடு களைக் களைவதற்கான வேலைகளையும் செய்கிறோம். தமிழ்நாடு முழுக்க இன்னமும் இரட்டை தம்ளர் வழக்கம் நடைமுறையில் உள்ள கிராமங்களை எங்கள் தோழர்கள் கணக்கெடுத்துக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

திராவிடர் கழகம் இந்த மாதிரியான சமூக நடவடிக்கைகளில் இருந்து முற்றிலுமாக விலகி விட்டது. வீரமணிக்கு இப்போது கருணா நிதியே உலகம். அவரது நற்பெயரைக் காப்பாற்றுவதுதான் வீரமணியின் லட்சியம். பெரியாரின் எழுத்துக்களை வெளியிடுவதை விட 'வாழ்வியல் சிந்தனைகள்' எழுதுவதில் தான் ஆர்வம் காட்டுகிறார். அதை எழுதத் தான் ஆயிரம் சாமியார்கள் இருக் கிறார்களே... பெரியார் இயக்கம் எதற்கு?

இவ்வாறு பேட்டியில் கூறியுள்ளார்.

---

*(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அல்லது இந்த மூன்று கூட்டத்தையும் வெளியாக்கி அவர்களை ஒழிக்க முயற்சிக்கும் 'தேசத் துரோகம்' பாமர மக்களுக்குப் பயன்படுமா என்பதை அறிஞர்கள் யோசிக்க வேண்டும்.

இன்று நம்முடைய பொது ஜனங்கள் அல்லது பாமர ஜனங்கள் என்பவர்களின் யோக்கியதை நாம் அறியாததல்ல. அவர்கள் ஆண்களில் 100க்கு 90 தற்குறிகள். பெண்கள் 100க்கு 98 தற்குறிகள்.

அதோடு மாத்திரமல்லாமல் 100க்கு 50 பேர்களுக்கு மேல் ஜீவனத்துக்கு வேறு எவ்வித மார்க்கமும் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்தாவது ஜீவனம் நடத்த வேண்டும் என்கின்ற கவலையும் பசிப்பிணியும் உள்ளவர்கள். எனவே இந்த நாட்டில் நன்மை - தீமை, யோக்கியன் - அயோக்கியன், சுயநலக்காரன் - பொதுநலக்காரன், சூழ்ச்சிக்காரன் - உண்மையானவன் என்கின்ற தன்மைகளை கண்டுபிடிக்க சரியான அறிவும் யோக்கியதையும் பொது மக்களுக்கு எப்படி உண்டாகும்?

ஆகவே, யாரோ ஒரு சில நபர்கள்தான் உண்மையாகவும், கவலையாகவும், உழைக்கக் கூடியவர்களாகவோ உண்மையை எடுத்துச் சொல்லக் கூடியவர்களாகவோ கிடைக்கலாம். ஆனால் அவர்கள் பொது ஜனங்களால் 'மகாத்மா' என்றோ தேசாபிமானி என்றோ தேசபக்தர் என்றோ தேசியவாதி என்றோ கருதப்படக் கூடியவர்களாய் இருக்க முடியாது என்பதோடு அவர்கள் "தேசத் துரோகியாயும்" மதத்துரோகியாயும் நாஸ்திகர்களாயும்தான் இருக்க முடியும்.

அதோடு மாத்திரமல்லாமல் பொது ஜனங்களால் காசவு கேட்கவும் துன்புறுத்தப்படவும் வேண்டியவர்களாகவும் இருக்கக் கூடும்.

எப்படி இருந்தாலும் முடிவில் "தேசத் துரோகிகள்" எனப்படுபவர்களும், நாஸ்திகர்கள் எனப்படுபவர்களும் தான் வெற்றி பெறுவார்களே தவிர, அவர்கள் தான்வெற்றி பெற்றாக வேண்டுமே தவிர மற்றபடி இந்த ஜாலவித்தையான தேசபக்தி வெற்றியடையவோ, மக்களுக்குப் பயன்படவோ போவதில்லை என்பது உறுதி.

# வலங்கை இடங்கை சாதிமுறைக் கேடுகள்

**புலவர் கோ. இமயவரம்பன்**

பண்டைய நம் தமிழகத்தில் சாதி, குலம், வருணம் என்பன போன்ற சொற்கள் தமிழ் மொழியில் இல்லாமையால் அவை தமிழ்நாட்டிலும் இருந்ததில்லை என்பது வெள்ளிடை மலை. இடைக்காலத்தில்தான் பார்ப்பனர் தமிழர் களிடையே நால்வகைச் சாதியினை நாட்டினர். பின்பு நான்கினை நாற்பதாக்கி அதன்பின் நாலாயிரமாக வளர்த்துவிட்டனர்.

இப்பார்ப்பனர்கள் இத்துடன் மட்டும் நின்று விடவில்லை. தமிழர்களிடையே ஏற்றத் தாழ்வினைக் கற்பித்தும் ஒரு சாதியினரைப் பிரிதோர் சாதியா ரோடு மோதவிட்டும் வேடிக்கை பார்த்ததோடு அல்லாமல் அதனால் பலனும் அனுபவித்து வந்துள்ளனர். இவற்றில் ஒன்றுதான் "வலங்கை இடங்கை" சாதி பாகுபாடுகளும் அதன் காரணமாக இவ்விரு சாதிக் குழுவினர்களுக்குள்ளும் ஏற்பட்ட சண்டைகளும் ஆகும்.

இந்தப் பிரிவினை எப்போது ஏற்பட்டது? எவ்வாறு தோன்றின? என்பவைகள் பற்றி திட்ட வட்டமாகக் கூறுவதற்கு இல்லை. ஆனால் இந்தப் பாகுபாடுகள் தமிழகத்தில் இருந்து இருக்கின்றன என்பது மட்டும் கல்வெட்டுக்களாலும், செப்பேடு களாலும், சில இலக்கியச் செய்யுள்களாலும், ஏன்? ஆங்கிலேயர்களின் குறிப்புக்களாலும் அவர்கள் கால நீதிமன்றத் தீர்ப்புகளாலும் அறிகின்றோம்.

இவற்றின் பெயர்க் காரணம் பற்றி கூறப்படும் வரலாற்றினை சிறிது காண்போம். கரிகாலச் சோழனது ஆட்சியின்போது பல்வேறு சாதிகளைக் கொண்ட இரு கட்சிகள் தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொண்டு தங்கள் தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்ள மன்னன் கரிகாலச் சோழன் அவைக்குச் சென்றார்களாம். அப்படிச் சென்றவர் களில் மன்னனுக்கு வலக்கைப் பக்கம் நின்று முறையிட்டவர்கள் "வலங்கை" சாதியார் என்றும் இடக்கை பக்கம் நின்று முறையிட்டவர்கள் "இடங் கை"யினார் என்றும் கரிகாலனால் அழைக்கப் பட்டார்களாம். அதில் இருந்து இவ்விரு கட்சி யினர்களைச் சார்ந்த சாதியினர்களுக்கும் இப் பெயர்களே நிலைக்கலாயின என்றும் கூறப்படு கின்றது.

ஆனால், இது சங்க காலத்து கரிகாலன் காலத்தில் நடந்திருக்க முடியாது. இதற்குத் தக்க ஆதாரங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படவே இல்லை. ஆனால் இந்த வலங்கை - இடங்கை சாதிப் பகுப்பு முறைகள் பிற்காலச் சோழர்கள் ஆட்சியில்தான் தோன்றின என்பதற்கு வேண்டுமானால் தக்க ஆதாரங்கள் உள்ளன.

காஞ்சிபுரத்தில் முன்னாளில் சலபநாயகன் என்னும் பார்ப்பனத் தலைவன் தலைமையில் வலங்கை சாதியார் 98 பிரிவினர்களும், இடங்கை சாதியார் சில பிரிவினர்களும் தங்களுக்குள் கட்சி உண்டாகியதால், தங்களுக்குள் சண்டை இட்டுக் கொண்டனர் என்று ஓர்சாசனம் தெரிவிக்கின்றது.

இந்த வலங்கை இடங்கை பிரிவின் காரணமாக பார்ப்பனர்களுக்குப் பகையாக கம்மாளர்களும், கோமுட்டிகளுக்குப் பகையாக பேரிச் செட்டிகளும், "பறையர்"களுக்குப் பகையாக "பள்ளர்"களும் இப்படிப் பல வகுப்பினர்களும் ஒருவருக்கொருவர் பகையாளர்கள் ஆயினர்.

விழாக் காலங்களில் வலங்கை சாதியார்களுக்கு மாதிலர் என்னும் தீண்டப்படாத இடங்கை சாதியார்களுக்கு மாதிகர் என்னும் அருந்ததியனரும் வாத்தியங்கள் வாசிக்க வேண்டும் என்றிருந்திருக் கின்றது. பிற்கால சோழராட்சிக் காலங்களில் ஒவ்வொரு நகரங்களிலும், சிற்றூர்களிலும் கூட வலங்கை, இடங்கையார்கள் வசிப்பதற்கு வீதிகள் எல்லாம் தனித்தனியே இருந்திருக்கின்றன. ஒரு பிரிவினர் வசிக்கும் வீதியில் வேறு பிரிவினர் வசிப்பதில்லை. சுபகாரியங்களில் ஆகட்டும் அல்லது துக்கக் காரியங்களில் ஆகட்டும் ஒரு பிரிவினர் வசிக்கும் வீதி வழியே மற்றொரு பிரிவினர் ஊர்வலம் வருவதோ, பிணம் தூக்கிச் செல்வதோ கிடையாது. இரு பிரிவினர்களுக்கும் பொதுவான வீதிகளில் வேண்டுமானால் போகலாம். மற்றும் கோயில் சாமிகளுக்கு நடத்தப்படும் விழாக்களும்கூட அந்த அந்த பிரிவினர்கள் தெருக்களில் மட்டுமே நடக்கும்.

இந்த வலங்கை இடங்கை கட்சிகளுக்கு தாசிகள், பணி செய்வோர் முதலானோர்களும் தனித்தனியே இருந்திருக்கின்றனர். வலங்கைதாசிகள் இடங்கை சாதியார்களுடைய கோயில்களுக்கோ, அல்லது இடங்கையார்கள் வீடுகளில் நடக்கும் திருமணம் முதலிய நிகழ்ச்சிகளில் நாட்டியம் ஆடுவதற்கோ செல்வதில்லை. அதுபோலவே இடங்கை தாசிகள் வலங்கை யார்களின் கோயில் விழாக்களுக்கோ செல்ல மாட்டார்கள். அதுபோலவே வலங்கை பணி செய்வோர் இடங்கையார்களுக்கு நேரில் போய் சாவு சொல்வதில்லை. அப்படி வலங்கையார் இடங்கை யார்களுக்கு சாவு முதலியன தெரிவிக்க வேண்டு மானால் இடங்கைப் பணி செய்வோரைக் கொண்டு தான் தெரிவிக்க வேண்டும். ஆனால், இடங்கை யார்கள் தம் பணியாளர்களைக் கொண்டு வலங்கை யார்களுக்கு தெரிவிக்கலாம் என்று இருந்தது.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் இந்தப் பிரிவுகளினால் நாட்டு மக்களிடையே பல குழப்பங்களும், பூசல் களும் ஏற்பட்டு அரசர்களாலும், ஊர் சபையினர் களாலும் ஏராளமான வழக்குகள் தீர்த்து வைக்கப் பட்டுள்ளன. இந்த வலங்கை இடங்கை பிரிவின் காரணமாக நாட்டில் பல்வேறு சாதி மக்கள் தங்கள் உரிமைகளை இழந்து அவதியுற்று இருக்கின்றனர்.

பெரும்பாலும் பிற்காலச் சோழர்களும், நாயக்க மன்னர்களும், வைதீக மனப்பான்மையுடையவர் களாகவும், பார்ப்பனர்கள் தனி உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர் களாகவும் இருந்திருக்கின்றனர். சாதிகள் வகுப்புகள் என்பவைகள் தர்ம நியாயமானது என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக வேரூன்றி இருந்தது. ஆகவே அந்த அந்த சாதியார்கள் அவர் அவர்களுக்கு உரிய விதிகளுக்கு மாறாக நடக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்தும் உடையவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர்.

இந்த மன்னர்கள் குற்றங்களுக்கு ஏற்ற தண்டனை விதிக்காது குலம், பிரிவு, அந்தஸ்து இவற்றிற்கு ஏற்றவாறு தண்டனை விதித்து இருக்கின்றார்கள். குற்றவாளியானவன் உயர்சாதிக்காரனாகவோ அல்லது செல்வவானாகவோ இருந்து விட்டால் விசாரித்தோம் என்று பெயரளவில் மட்டும் விசாரித்துவிட்டு லேசான தண்டனையோ, அபராதமோ விதித்து விடுவார்கள். இப்படி இவர்கள் குலம், கோத்திரம், சாதி ஆச்சாரத்திற்கு ஏற்றவாறு தண்டனை வழங்குங்காலை வேதப் பார்ப்பனர்கள் சொற்படியும், அவர்களின் ஆலோசனைப் படியும், வருணாச்சிரம தர்மத்திற்கு மாறுபடாலும் தீர்ப்புகள் வழங்கி இருக்கின்றனர்.

மற்றும் கோயில்களில் விழாக் காலங்களில் எந்த எந்த சாதியார்களுக்கு முதல் மரியாதை, எந்த எந்த வகுப்பினர்களுக்கு இரண்டாவது மரியாதை என்பது பற்றியும், யார் யார் எந்த எந்த இடங்களில் இருந்து எந்த எந்த நேரங்களில் கடவுளை வணங்க வேண்டும் என்பது குறித்தும் எந்த எந்த சாதியார்கள் முறையே எந்த எந்த வாகனங்களிலும், பல்லக்குகளிலும் ஏறிச் செல்ல தகுதி உடையவர்கள் என்பது குறித்தும், எந்த எந்த வழக்க ஒழுக்கங்களைக் கையாள வேண்டும் என்பது குறித்தும், அடிக்கடி ஆட்சேபணைகள் பூசல்கள் ஏற்படும் போது அரசர்கள் பார்ப்பனப் பண்டிதர்களைக் கொண்டே வருணாச்சிரம முறைப்படி தீர்ப்புகள் வழங்கி இருக்கின்றார்கள்.

கம்மாளர்கள் தங்கள் வீட்டிற்கு சாந்து இட்டுக் கட்டிக் கொள்ளுதல், இரட்டை நிலை வைத்துக் கட்டிக் கொள்ளுதல், நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதுதல், வெளியில் செல்லும் போது காலில் செருப்பணிந்து செல்லுதல் ஆகிய உரிமைகள் கூட அற்றவர்களாக முன்பு இருந்திருக் கின்றனர். ஆனால் பிற்காலத்தில் கொன்னேறி மெய் கொண்டான் என்ற சோழன் தென் கொங்கு நாடு, காஞ்சிக் கோயில் நாடு, வெங்கால நாடு, தலையூர் நாடு முதலிய ஏழு நாடுகளில் வாழும் கம்மாளர்களுக்கு மட்டும் மேற்கண்ட உரிமைகள் பெற அனுமதி அளித்தார்கள்.

இது பற்றி கொங்கு நாட்டில் பேரூர், கரூர், பாரியூர், மொடக்கூர், குடிமங்கலம் ஆகிய ஊர்களில் உள்ள கோயில்களில் இவ்வுரிமைகள் கல்வெட்டு களாக வெட்டப்பட்டு உள்ளன.

கி.பி.1623 இல் பிறப்பிக்கப்பட்ட அம்பாசமுத் திரம் பிரமதேய சாசனத்தில் கம்மாள சாதியார்கள் தங்கள் கிளை வகுப்புக்களுக்குள் கலப்பு மணம் செய்து கொள்ளுதல் கூடாது என விதிக்கப்பட் டுள்ளது.

பட்டு நூல் வகுப்பினர்கள் உப கர்மங்கள் செய்து கொள்ளும் உரிமை இல்லாதவர்களாகவும் இருந்து இருக்கின்றனர். பிறகு இவர்கள் இராணி மங்கம்மாள் காலத்தில் அவரிடம் முறையிட்டு மேற்படி உரிமைகளுக்குச் சாசனம் பெற்றனர்.

கி.பி.19 ஆம் நூற்றாண்டில் முற் பகுதியில் நாடார் இனப் பெண்கள் தாழ்த்தப்பட்ட வகுப்புக்களான பள்ளர், பரதவர் குலப் பெண்களைப்போல் மார்பினை மூடாது இருப்பது போலவே இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டிருக் கின்றனர்.

திருவாங்கூர் மகாராஜாவானவர் இவர்கள் (நாடார் குலப்பெண்கள்) செம்படவர்கள் பெண்கள் மார்பினை மூடுவது போல உடை தரிக்கலாமேயன்றி உயர்சாதிப் பெண்கள் தரிப்பது போல் தரிக்கலாகாது என்று கட்டளை இட்டு இருக்கின்றார். ஆனால், கி.பி.1859 இல் ஆங்கிலேயரான சார்லஸ் டிரிவிலியன் என்பார் இவர்களும் மார்பு மீது துணி அணிந்து கொள்ளலாம் என்று உத்தரவு இட்டிருக்கின்றார். மற்றும் வெள்ளக் கோயில், தென்காசி நீதிமன்ற தீர்ப்புக்கள் மூலம் நாடார் சமூகம் எத்தகைய கொடுமைகளுக்கெல்லாம் ஆளாக்கப்பட்டு இருந்தன என்பதுதெற்றென விளங்குகின்றது.

கி.பி.1809 ஆம் ஆண்டு ஜுலை 10 ஆம் தேதி செங்கற்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜார்ஜ் கோல்மென் துரை அவர்கள் அதற்கு முன் இவ்விரு வகுப்பினர்களும் விழாக் காலங்களிலும் மற்ற முக்கிய தினங்களிலும் ஊர்வலம் வரும்போது தரித்துக் கொள்ளும் விருதுகள் மற்றைய அடையாளங்கள் பற்றி ஏற்பட்ட சச்சரவுகளைத் தீர்த்து இறுதியாக இன்ன இன்னாருக்கு இன்ன இன்னபடி நடந்து கொள்ள வேண்டும் என்றும் தம் தீர்ப்பில் கூறியுள்ளார். இது பற்றி விரிப்பின் பெருகும் என்பதனால் இத்துடன் முடிக்கின்றேன்.

இந்த வலங்கை, இடங்கைச் சண்டை காரணமாக பல்வேறு சாதியினர்க்குள்ளும் பூசல்களும், மனக்கசப்பும் பிற்காலத்தில் மிகுதியாக வளரலாயின. ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரது சாதிப் பெயரினைச் சொல்லி ஏளனமாகத் திட்டிக் கொள்ளலாயினர். இன்றும் நம் தமிழகத்தில் ஒவ்வொரு சாதியினைப் பற்றியும் கூறப்படும் வசவு மொழிகள் எல்லாம் கூட மேற்கூறிய மனக்கசப்புகள் காரணமாகத் தோன்றியவைகளேயாகும்.

## இளம்பிள்ளையில் ஆர்ப்பாட்டம்

19.04.09 மாலை 4.00 மணியளவில் சேலம் இளம்பிள்ளையில் ஈழத்தமிழர் படுகொலை கண்டித்து, இலங்கை அரசுக்கு இன்றுவரை துணை நிற்க்கும் காங்கிரசு அரசை வரும் நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடிக்க வேண்டி காயக்கட்டு ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு பெரியார் தி.க மாவட்ட இணைசெயலாளர் முத்துமாணிக்கம் தலைமை தாங்கினார். ஊர்வலத்தில் ஈழத்தமிழரை கொன்று குவிக்கும் காங்கிரசை புறக்கணிப்பீர், வாக்குக்காக தமிழர்களை தேடிவரும் சோனியாவை தமிழகத்தில் அனுமதிக்க மறுப்போம், விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும், தமிழர்களே தமிழர்களே உங்கள் மானமுள்ள வாக்கை தமிழின துரோக காங்கிரசுக்கு போடாதீர் - கை சின்னத்திற்கு போடாதீர் என்று முழக்கமிட்டு சென்றனர். ஊர்வலத்தில் 100ககும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# பார்ப்பான் - பணக்காரன் உருவாக்கும் "தேசாபிமானம்"

## தந்தை பெரியார்

தேசாபிமானம் தேசபக்தி என்பவைகள் சுயநலச் சூழ்ச்சி என்றும், தனிப்பட்ட வகுப்பு மக்கள் தங்கள் வகுப்பு நலத்துக்கு ஆக பாமர மக்களுக்குள் புகுத்தப்படும். ஒரு (வெறி) போதையென்றும் பல தடவை நாம் சொல்லி வந்திருக்கிறோம்.

மற்றும், 'தேசாபிமானம் என்பது காலிகளுக்கு ஏற்பட்ட கடைசி ஜீவன் மார்க்கம்' என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறிய ஆப்த மொழி என்றும் பல தடவை எடுத்துக்காட்டி இருக்கிறோம்.

இவற்றை எந்த ஒரு தேச பக்தனும், தேசாபிமானியும் இதுவரை மறுக்கவே இல்லை என்பதோடு இவ்வாப்த வாக்கியங்கள் நிறைந்த ஆங்கிலப் புத்தகங்கள் பாடப் புத்தகங்களாகவும் வைக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இனியும் யாருக்காவது இவற்றில் சந்தேகங்கள் இருக்குமானால், இன்றைய அபிசீனியா, இத்தாலி யுத்த மேகங்களையும், இடியையும், மின்னலையும் பார்த்தால் கண்ணாடியில் முகம் தெரிவது போல் விளங்கும். மற்றம் தேசாபிமான விஷயமாயும், தேசக் காவலர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற சர்வதேச பாதுகாப்புச் சங்கத்தின் யோக்கியதையைப் பார்த்தாலும் தெரியும்.

இளைத்தவனை வலுத்தவன் கொடுமைப்படுத்துவதும், ஏமாந்தவனைத் தந்திரசாலி ஏமாற்றுவதும் தான் இன்று ஆஸ்திகர்களுடைய கடவுள்களின் இரண்டு கண்களாகவும், தேசபக்தர்கள் தேசாபிமானிகள் என்பவர்களின் ஜீவ நாடியாகவும் இருந்து வருகின்றன.

இந்த இரண்டு காரியங்களுக்குத்தான் அதாவது இம்சித்தல், ஏமாற்றுதல் ஆகிய இரண்டு காரியங்களுக்காகவும் அவை நிரந்தரமாகவும், ஒழுங்காகவும் பக்தியாகவும் நடைபெறுவதற்காகவேதான் உலகில் கடவுள், மதம், மோட்சம், நரகம், சாஸ்திரம், புராணம், அரசு, பிரதிநிதித்துவம், சட்டசபை, சட்டம், போலீசு, நீதிபதி, சிறைக்கூடம், சத்தியம், நீதி, ஒழுக்கம், ஒழுங்குமுறை, யோக்கியம், பரிசுத்தம், பெரியவர் வாக்கு, மகாத்மாக்கள் சேவை, தெய்வத் தன்மை பொருந்தியவர்கள், அவதாரம் என்பன போன்ற சர்க்கரை பூசிய பாஷாணங்கள் இன்று உலகில் கற்பிக்கப்பட்டு இருந்து செல்வாக்குப் பெற்றோ, பெறாமலோ காப்பாற்றப்பட்டு வருகின்றன.

இந்திய தேசாபிமானம், தேசபக்தி என்பதுஇன்று ஒரு சாதாரண மனிதராகிய காந்தியாரிடம் அதாவது மகாத்மா என்பவரிடம் மக்கள் வைத்திருக்கும் - வைக்கும் பக்தி அபிமானம் ஆகியவற்றைப் பொருத்தே இருக்கிறது.

எவனாவது காந்தியாரை முட்டாள் என்று சொல்லிவிட்டாலோ அல்லது அவர் நம்மைப் போல சாதாரண மனிதர்தான் என்று சொல்லி விட்டாலோ அதுவே இன்று எந்த மனிதனையும் தேசத் துரோகி என்றும், தேசாபிமான மற்றவர்கள் என்றும் சொல்லி விடுவதற்கும் பரீக்ஷீப்பதற்கும் போதுமான கருவியாய் இருக்கிறது.

இன்று இந்தியாவிலுள்ள தேசாபிமானம் பணச் செலவினாலும், பார்ப்பனப் பிரச்சாரத்தாலும் ஏற்படுவதே ஒழிய மற்றபடி மக்கள் சமூகத்துக்கு பொதுவாக உள்ள ஏதாவது ஒரு குறையையோ தேவையையோ உத்தேசித்து ஏற்பட்டதல்ல.

பார்ப்பான் தன்னை மனித சமூகத்தில் இருந்து பிரித்துக் கொண்டு, தான் மாத்திரமே மேல் சாதிக்காரன் என்றும் மற்றவர்கள் தனக்குத் தொண்டு செய்யவே கடவுளால் பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் சொல்லுகிறவன்.

பணக்காரர்களாய் முதலாளிகளாய் இருக்கிறவர்களோ அவர்களுக்கும் அது போலவே தாங்கள் மற்ற சாதாரண மக்களிடம் தமக்கு இஷ்டமான வேலை வாங்கிக் கொண்டு தமக்கு இஷ்டமான கூலி கொடுக்கவே கடவுள் தங்களை சிருஷ்டித்துத் தமக்கு செல்வத்தைக் கொடுத்து மற்ற மக்களைத் தொழில் செய்ய சிருஷ்டித்து இருக்கிறார் என்றும் கருதிக் கொண்டிருக்கிறவர்கள்.

இவ்விரண்டு பேருக்கும் உள்ள வித்தியாசமெல்லாம் பார்ப்பான் கூலி கொடுக்காமல் வேலை வாங்கிக் கொள்ள உரிமையுள்ளவன் என்பதும் பணக்காரன் ஏதாவது கூலி கொடுத்து வேலை வாங்க வேண்டும் என்பதும் தவிர மற்றப்படி மற்ற ஜனங்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்பதிலும் இந்நிலை கடவுளால் அளிக்கப்பட்டது என்பதிலும் வித்தியாசமான அபிப்பிராயமில்லவே இல்லை.

இப்படிப்பட்ட இந்தஇரண்டு கூட்டத்தாரும் சேர்ந்துதான் இந்தியாவின் தேசாபிமானத்துக்குக் கர்த்தாக்களாய் இருக்கிறார்கள்.

எப்படி என்றால் பணக்காரன் பணத்தை பல லட்சக்கணக்காய் கொடுக்கிறான்; பார்ப்பான் தந்திரத்தை பிரயோகிக்கிறான். இருவரும் சேர்ந்து கூலிகளைப் பிடித்து தேசாபிமானப் பிரசாரம் நடத்தி அதற்கு செல்வாக்கை உண்டாக்கி விடுகிறார்கள்.

ஆகவே இந்த இரண்டு கூட்டத்தார்களாலும் இவர்களுடைய கூலிகளாலும் நடத்தப்படும் தேசாபிமானம் பாமர மக்களுக்குப் பயன்படுமா

(2 ஆம் பக்கம்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தி.மு.க. ஆட்சி கைது செய்தது. ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளை விளக்கிடும் பெரியார் திராவிடர் கழகம் தயாரிந்த குறுந்தகட்டை, தேர்தல் ஆணையம் தடை செய்ய மறுத்த நிலையில், காவல்துறை, அதை ஒளிபரப்ப தடை செய்ததோடு, குறுந்தகடுகளை விநியோகித்தற்காக பெரியார் திராவிடர் கழக ஈரோடு மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், கோவை மாநகர கழகத் தோழரும், பெரியார் படிப்பக பொறுப்பாளருமான கதிரவன் ஆகியோரை தேச விரோத சட்டப் பிரிவுகளின் கீழ் கைது செய்தது. கடந்த மூன்று வாரங்களாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

கழகத் தோழர்களின் வீடுகளில் காவல் துறையினர் நள்ளிரவில் புகுந்து சோதனைகளை நடத்தினர். பெரியார் திராவிடர் கழகம் தயாரித்த ஈழத் தமிழர் படுகொலைக் காட்சிகளை சித்தரிக்கும் துண்டறிக்கைகளை வழங்கவும், காவல்துறை மறுத்ததோடு துண்டறிக்கை வழங்கிய தோழர்கள் மீது வழக்கு பதிவு செய்தனர்.

மத்திய சென்னை தொகுதியில் துண்டறிக்கைகளை வழங்கி பரப்புரை செய்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீதும் இராயப்பேட்டை பெரியார் படிப்பகத்தின் மீதும் அங்கே இருந்த பெரியார் சிலை மீதும் தி.மு.க. ஆதரவு குண்டர்கள் வன்முறை தாக்குதல் நடத்தினர். தாக்குதலுக்கு உள்ளான கழகத்தினர் மீதே தி.மு.க. தேர்தல் அலுவலகத்தை தாக்கியதாக பொய் வாக்குப் போட்டு காவல்துறை கைது செய்தது.

இனி தேர்தல் என்றால் விலை கொடுத்து வாங்கிவிடலாம் என்ற மிக மேசாமான முன் உதாரணத்தை தி.மு.க.வினர் உருவாக்கி விட்டார்கள். இதற்கு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியும் பச்சைக் கொடி காட்டி அழிக்கப்பட முடியாத களங்கத்தை ஏற்படுத்திவிட்டார்.

தமிழ்நாட்டில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி உட்படஅனைவரும் முன் வைத்த ஈழத்தில் போரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு செவி சாய்க்க விடாப்பிடியாக மறுத்த சோனியாவின் காங்கிரசுக்கு மீண்டும் அதிகாரத்தை தி.மு.க. கூட்டணி வழங்கி மகிழ்ச்சியடைந்து நிற்கிறது.

போர் நிறுத்தம் வந்துவிட்டது என்று கலைஞர் கருணாநிதி தனது 6 மணி நேர உண்ணாவிரதப் போராட்டத்தில அறிவித்தது உண்மைதானா என்பது மக்களுக்கே தெரியும்.

ஆனாலும், ஈழத் தமிழர்கள் பிரச்சினைக்கு எதிராக ஆணவத்தோடு பேசிய ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன், மணிசங்கர அய்யர், தங்கபாலு போனற் காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் இந்தத் தேர்தல் களத்தில் தோற்கடிக்கப்பட்ட மகிழ்ச்சி கிடைத்திருக்கிறது.

பெரியார் திராவிடர் கழகம் வலிமையாக உள்ள பகுதிகளான சேலம், ஈரோடு, மயிலாடுதுறை, திருப்பூர், கோவை தொகுதிகளில் கழகம் மேற்கொண்ட தீவிர பரப்புரையால் காங்கிரஸ் தோல்வியை சந்தித்துள்ளதை குறிப்பிட விரும்புகிறோம். சென்னையில் காவல்துறை கழகத்தினரின் பரப்புரையை அடக்குமுறைகளால் முடக்கிவிட்டது. தமிழகத்தின் பல்வேறு தொகுதிகளில் கிராமங்களிடையே ஈழத்தமிழர் பிரச்சினை கொண்டு செல்லப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

காங்கிரஸ் போட்டியிட்ட தொகுதிகளில் பாரதிராஜா, சீமான், ஆர்.கே.செல்வமணி உள்ளிட்ட இயக்குனர்கள் மேற்கொண்ட பரப்புரை இயக்கம் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெரியார் திராவிடர் கழகம், தமிழின உணர்வாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மேற்கொண்ட தீவிரமான பரப்புரைக்கு கிடைத்த வெற்றியே காங்கிரஸ் தலைவர்களின் தோல்விக்கு காரணம்.

தி.மு.க. - காங்கிரஸ் அணி வெற்றி பெற்றுவிட்டது என்பதாலேயே தமிழ்நாட்டில் ஈழத் தமிழருக்கான ஆதரவு உணர்வுகள் மங்கிவிட்டதாக கருதுவது தப்புக்கணக்கேயாகும். அந்த உணர்வுகள் அப்படியே நீடிக்கின்றன. தேர்தல் நாடகம் முடிவுக்கு வந்துவிட்ட நிலையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நின்ற அரசியல் சமூக சக்திகள் மரணத்தோடு போராடிக் கொண்டு எஞ்சியிருக்கும் ஈழத் தமிழர்களையாவது காப்பாற்றிடுமாறு இந்திய அரசை வலியுறுத்த வேண்டும்.

இட்லர் நடத்திய இனப் படுகொலைகளையும் மிஞ்சிவிட்டது இராஜபக்சேயின் இனப் படுகொலை. இதற்கு முழு ஆதரவு வழங்கிய இந்தியாவின் துரோகத்தை வரலாறு ஒரு போதும் மன்னிக்கப் போவது இல்லை. இதை நியாயப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் இப்போது இல்லை என்பதால், இனியாவது தமிழர்களைக் காப்பாற்ற தி.மு.க.வினர் முன்வரவேண்டும்.

தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, தொடர்ந்து அதை வலியுறுத்தினால்தான், மக்கள் மன்றம் அந்த அம்மையாரின் ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டை நம்பும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.


அத்துடன் - தேசிய கட்சிகளை மாநிலக் கட்சிகள் வளர்த்து விடுவது தமிழர்களுக்கு ஆபத்தானது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தல் முறைகளில் ஏற்கனவே வெகு மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள். நடந்து முடிந்த தேர்தல் இதை மேலும் உறுதியாக்கியிருக்கிறது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 22nd May 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 மே 28, 2009 புரட்சி 8 முழக்கம் 20 விலை : ரூ.2.50


## போர்க் குற்றவாளிகளான ராஜபக்சே கும்பல் மீது

# அய்.நா.வே., நடவடிக்கை எடு!

*ஈழத் தமிழர்கள் உரிமைக்காக உருவாக்கப் பட்ட தமிழர் ஒருங்கிணைப்பு, கடந்த 24/5/09 அன்று திருச்சிராப்பள்ளியில் கூடி தற்போது உருவாகியுள்ள சூழல் குறித்து விவாதித்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெ. மணியரசன் (பொதுச் செயலாளர், தமிழ் தேசப் பொது வுடைமை இயக்கம்), தியாகு (பொதுச் செயலாளர், தமிழ் தேசிய விடுதலை இயக்கம்) ஆகியோர் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதில் கூறப்பட் டுள்ளதாவது:*

ஈழத்தமிழர்கள் உயிரையும், உரிமையையும் காக்க உடனடியாகச் செய்ய வேண்டிய பணிகள் பற்றி விவாதித்துப் பின்வரும் தீர்மானங்கள் இயற்றப் பட்டன. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் முதல்கட்டமாக 9.6.2009 சென்னையிலும், 10.6.2009 சேலத்திலும், 11.6.2009 ஈரோட்டிலும், 'ஈழம் - நாம் என்ன செய்ய வேண்டும்?' என்ற தலைப்பில் பெருந்திரள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. அடுத்து தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் இப்பெருந்திரள் பொதுக் கூட்டங்கள் நடைபெறும். ஒத்த கருத்துள்ள பிற அமைப்பு களையும் தமிழின உணர்வாளர்களையும் இணைத் துக் கொண்டு இப் பொதுக் கூட்டங்கள் நடை பெறும்.

### தீர்மானங்கள்

- சிங்கள இனவெறி அரசு நடத்தும் மிகக் கொடிய தமிழின அழிப்புப் போரில் கடந்த ஓராண்டில் இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்படப் பல்லாயிரக்கணக் கானோர் படுகாயமுற்று உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உரிய முறையில் உடனடி மருத்துவம் கிடைக்காததால் படுகாயமுற்ற பல்லாயிரம் பேர் இறந்துவிட்டனர். எஞ்சியிருக் கும் பல்லாயிரம் பேரையாவது பாதுகாக்கும் உடனடிப் பொறுப்பு ஐ.நா. மன்றத்துக்கும் உலக நாடுகளுக்கும் உள்ளது.

  படுகாயமடைந்தோர் மட்டுமின்றி, இந்தப் போரினால் உற்றார் உறவினரையும், தங்கள் விடுதலைக்குப் போராடிய போராளிகளையும் பறிகொடுத்து மன அதிர்ச்சிக்கு ஆளாகி ஏராளமானோர் உள்ளனர். இவர்களுக்கும் உடனடி மருத்துவம் தேவைப்படுகிறது. எனவே ஐ.நா. மன்றத்தின் மேற்பார்வையில் ஈழத் தமிழர்களுக்கு மருத்துவ வசதிகளை உடனடியாக வழங்க வேண்டும்.

- போரில் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு நடைபெறும் அனைத்து வகை துயர்துடைப்புப் பணிகளும் ஐ.நா. மன்றம் அல்லது பன்னாட்டுக் குழுவினரின் நேரடி மேற்பார்வையில் நடைபெற வேண்டும்.

  இத்துயர் துடைப்புப் பணி, இனவெறிப் போரை நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள அரசின் மூலம் நடந்தால் உதவிகள் பாதிப்புற்ற மக்களுக்குப் போய்ச் சேர மாட்டா. சிங்கள இனவெறி அரசு இவற்றையும் தன் இனவெறி நலன்களுக்கே பயன்படுத்திக் கொள்ளும் என அஞ்சுகிறோம்.

### "தமிழர் ஒருங்கிணைப்பு" வலியுறுத்தல்

- இடைத்தங்கல் முகாம் என்றும் நல்வாழ்வுக் கிராமம் என்றும் பெயர் சூட்டி இராஜபக்சே அரசு தமிழர்களை அடைத்து வைத்திருக்கும் முகாம்கள் அனைத்தும் இட்லரின் வதை முகாம்களை ஒத்தவை என்பதை உலகு அறியும். இம்முகாம்களில் பல்லாண்டுகளாகத் தமிழர் களை அடைத்து வைக்க இராஜபக்சே திட்டமிட்டிருக்கிறார். இவ்வாறு தமிழர்களை இடம்பெயர்த்து அடைத்து வைத்துவிட்டு, அவர்களின் சொந்த ஊர்களில் சிங்களர்களைக் குடியேற்றுவது இராஜபக்சேயின் திட்டம். வரலாற்று வழியில் நிலைத்துள்ள தமிழர் தாயகப் பகுதிகளை ஒழித்துக் கட்டி அவற்றைச் சிங்களப் பகுதி ஆக்குவதே அவரது நோக்கம்.

  எனவே ஐ.நா. மன்றமும் உலக நாடுகளும் தலையிட்டு தமிழ் மக்களை முகாம்களிலிருந்து விடுவித்து, அவர்களது சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்ல ஆவன செய்ய வேண்டும். மீள் குடியமர்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அவர்களுக்குச் செய்ய வேண்டும்.

- இப்போது ஏற்பட்டுள்ள பேரழிவைப் பயன் படுத்தித் தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடைபெறவிடாமல் ஐ.நா. மன்றமும் உலக நாடுகளும் தடுத்து நிறுத்த வேண்டும்.

- இராஜபக்சே அரசு தமிழீழ மக்களுக்கு எதிராக நடத்தி வருவது இன அழிப்புப் போராகும். இந்தப் போரில் சிங்கள இராணுவம் கொத்துக் குண்டுகளையும், வேதிக் குண்டுகளையும் வீசியும் அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்திலிருந்த பொதுமக்களை பீரங்கிகள், எறிகணைகள், வான்வழி குண்டுவீச்சு இவற்றால் தாக்கியும் கொலை செய்தும், வெள்ளைக் கொடியோடு பேச்சு நடத்த வந்தவர்களைப் படுகொலை செய்தும் பன்னாட்டுச் சட்டங்களையும் போர்நெறி முறைகளையும் மீறியுள்ளது.

  ஆகவே, இலங்கையின் அதிபர் இராஜபக்சே, பாதுகாப்புத் துறைச் செயலாளர் கோத்தபய இராஜபக்சே, படைத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைப் போர்க் குற்றங்களுக்காகவும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்காகவும், இனப் படுகொலைக் குற்றங்களுக்காகவும் தளைப்படுத்தி பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்துமாறு ஐ.நா. பாதுகாப்புக் குழுவைக் கேட்டுக் கொள்கிறோம்.

- தமிழீழ மக்களுக்கு எதிரான இனப்படுகொலைப் போர் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் உலக அளவில் ஏற்புடைய நீதிபதிகள் குழு ஒன்றின் தலைமையில் புலனாய்வும், விசாரணை யும் நடத்தி உயிரிழப்புகள், உடைமையிழப்புகள் தொடர்பான கணக்குப் பொறுப்பைத் தீர்வு செய்வதற்கு ஐ.நா. மன்றம் ஆவன செய்ய வேண்டும்.

- தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கு மாறும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ள இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் அத்தடையை நீக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

# காவல்துறை அடக்குமுறை-கழகத்தினர் கைது!

## கோவை இராமகிருட்டிணன் மீதும் தேசிய பாதுகாப்பு சட்டம்

ஈழத் தமிழர்கள் மீதான இன அழித்தொழிப்புக்கு சிங்களத்துக்கு பேருதவி செய்த காங்கிரஸ் கட்சியை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகம் மேற்கொண்ட களப்பணி பரப்புரை களுக்காக பெரியார் திராவிடர் கழகத் தின் செயல் வீரர்கள் பலரையும் தி.மு.க. ஆட்சி பல்வேறு பொய் வழக்கு களின் கீழ் சிறைப்படுத்தியுள்ளது. கழகத் தோழர்கள் பலரும் சிறையி லடைக்கப்பட்டு, கழகத்தின் செயல் பாடுகளை முடக்கிவிடலாம் என்று தமிழக அரசு கருதுகிறது.

ஈழத் தமிழர்கள் மரண விளிம்பில் நிற்கும் சூழலில் சிங்கள ராணுவத் துக்கான ஆயுதங்களை 80 லாரிகளில் ஏற்றிக் கொண்டு கொச்சி துறைமுகத் திற்கு கோவை நீலாம்பூர் நெடுஞ் சாலையில் வந்த நிலையில் நூற்றுக் கணக்கான பொது மக்கள் திரண்டு ராணுவ வாகனத்தை மறித்தனர். சம்பவ இடத்தில் இருந்ததாக கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட் டிணன், பெரம்பலூர் இலக்குமணன் மற்றும் ம.தி.மு.க., தமிழ் தேசிய அமைப்புகளைச் சார்ந்த நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்ட னர். கடந்த மே 2 ஆம் தேதி முதல் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உள்ளிட்ட தோழர்கள் சிறையிலிருந்து வரு கின்றனர். இந்த நிலையில் கோவை இராமகிருட்டிணன் மீது தேசிய பாதுகாப்பு சட்டத்தை தமிழக அரசு ஏவியுள்ளது. ஏற்கனவே திண்டுக்கல் பொதுக் கூட்டம் ஒன்றில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை -

(4 ஆம் பக்கம்)

## முகாம்களை சுற்றி மின்சாரம் பாய்ச்சிய முள்வேலி

# வடக்கு – கிழக்கில் நடக்கும் ராணுவ ஆட்சி

*ராணுவப் பிடியில் யாழ்ப்பாணம் – மட்டக்களப்பில் – தமிழர்கள் சந்திக்கும் துயரங்களை படம் பிடித்து ‘ஆனந்த விகடன்’ (மே 27) வெளியிட்டுள்ள கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:*

போரை முடித்துவிட்டதாக அறிவித்திருக்கிற அரசாங்கம், அந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு என்ன செய்யப் போகிறது என்பதை உலகம் உற்றுக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறது.

கொழும்பில் ஆறு லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலும் அதே எண்ணிக்கையிலான மக்கள் இருப்பார்கள். கிழக்கு மாகாணத்தில் நான்கு லட்சம் பேரும், போர் முனையின் கொடுமையைக் கடந்த ஓராண்டாக அனுபவித்த வடக்கு மாகாணத்தில் இரண்டரை லட்சம் பேரும் இருக்கிறார்கள். சிங்களர்களின் பண்டிகை, இலங்கை சுதந்திர தினம், தேர்தல் வெற்றிகளின்போது கொழும்புத் தமிழர்களின் நிம்மதி மொத்தமாகப் பறிபோய்விடும். வெள்ளை வேன்களில் கடத்தப்பட்டும், காவல்துறையால் அச்சுறுத்தப்பட்டும் வாழும் மக்கள் அவர்கள். தமிழன் என்பதற்கான அடையாளமான பொட்டு வைக்காமல் வாழப் பழகிவிட்டார்கள் அங்கு. யாழ்ப்பாணம், கடந்த 14 ஆண்டுகளாக எமர்ஜென்சி அறிவிக்கப்பட்ட பகுதியாகத்தான் இருக்கிறது. அங்கு உறவினர்கள் யாரும் வந்து பார்க்க முடியாது. இவர்களும் வெளியூர் போக முடியாது. எங்கு வேலைக்குப் போனாலும், மாலை ஆறு மணிக்கு முன்னதாக வீட்டுக்குள் போய் அடங்கிவிட வேண்டும் என்ற அடக்குமுறை தொடர்கிறது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் வாழும் இடங்களில் சிங்களவர்கள் வலுக்கட்டாயமாகக் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இடஒதுக்கீட்டின்படி, சுகாதாரப் பணியாளர் வேலைக்கு 100 பேர் எடுத்தால், ஐந்து தமிழர்களுக்குத்தான் அங்கு வேலை கிடைக்கும். அந்த அளவுக்கு சிங்களக் குடியேற்றம் அதிகமாகிவிட்டது. புலிகளிடம் இருந்து கைப்பற்றியதும் ‘கிழக்கின் உதயம்’ என்று ஒரு திட்டத்தை மகிந்தா அறிவித்தார். பள்ளிக் கூடம், தொழிற்சாலை, மருத்துவமனை ஆகியவை கட்டித் தரப்படும் என்றார். எதுவும் நடக்கவில்லை. அங்கு நடத்தப்பட்ட தேர்தலில், பிள்ளையான் முதலமைச்சர் ஆனார். ‘என் மாகாணத்தின் வளர்ச்சிக்குச் சொன்னபடி பணத்தை ஒதுக்கவில்லை’ என்று அவர் புகார் சொன்னார். உடனே சிங்கள அதிகாரிகளால் மிரட்டப்பட்டு, இப்போது அமைதியாக இருக்கிறார். வடக்கு மாகாணத்தைக் கைப்பற்றியதும் ‘வடக்கில் வசந்தம்’ என்ற திட்டம் கொண்டு வரப்படும் என்று மகிந்தா அறிவித்துள்ளார். கிளிநொச்சியைப் பிடித்ததும் தமிழர்களுக்கான தீர்வு அறிவிக்கப்படும் என்று சொன்னார். ஆனால், ஐந்து மாதங்கள் ஆகியும் அப்படி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

‘தமிழர்கள் கொல்லப்படுகிறார்களே?’ என்று டெல்லி பத்திரிகையாளர்கள் மாறி மாறிக் கேட்டபோது கோபமான மகிந்தா ராஜபக்சே, “என் நாட்டு மக்களைப் பற்றி என்னைவிட உங்களுக்கு அதிகமான அக்கறை இருக்குமா?” என்று கேட்டார். அந்த அக்கறையை ராஜபக்சே காட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. முதலில் அவர் கவனிக்க வேண்டியது வன்னி பகுதியில் உள்ள முகாம்களை.

போரின் பெருவாய் தின்று தீர்த்த மக்கள் போக, இன்றும் லட்சக்கணக்கான தமிழ்மக்களை வதை முகாம்களில் அடைத்து வைத்திருக்கிறது சிங்கள அரசு. மாற்றுடுப்புகள் சிலவற்றுடன் தலைச் சுமையாக ஒரு பையைச் சுமந்தபடி உயிர்ப் பிச்சை கேட்டு வரும் மக்களை வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் பகுதியின் அடர் காட்டுக்குள் அமைந்திருக்கும் இடைத்தங்கல் முகாமுக்குக் கொண்டு செல்கிறார்கள். சுமார் 100 ஏக்கர் பரப்பளவிலான இந்த முகாமில், அரசின் கணக்குப்படி 1 லட்சத்து 33 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. இதுவரை 2 லட்சத்துக்கும் மேலானவர்கள் வந்திருப்பதாகச் சொல்கிறது. ஆனால், அந்த முகாம்களில் குடியிருப்பு என்று எதுவும் இல்லை. செஞ்சிலுவை சங்கம் வழங்கிய தற்காலிகக் கூடாரங்கள் மட்டுமே எங்கும் நிறைந்திருக்கின்றன. சின்னஞ்சிறிய கூடாரம் ஒவ்வொன்றிலும் மூன்று குடும்பங்கள் நெருக்கியடித்து வசிக்கின்றன.

முகாம் அமைக்கப்பட்டு மாதக் கணக்காகிவிட்ட நிலையில், இதுவரை லாரிகள் மூலமாகவே குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. அது குடிக்க மட்டுமே! குளிக்கவும் அன்றாடத் தேவைகளுக்கும் தண்ணீர் கிடையாது. அவர்கள் அனைவரும் குளித்து வாரக் கணக்கில், மாதக் கணக்கில் ஆகின்றன. இப்போதுதான் முகாமில் கிணறு தோண்டும் பணி நடந்து வருகிறது. நாள் ஒன்றுக்கு ஒரு தடவை லாரிகள் மூலம் ஏதோ உணவு விநியோகிக்கிறார்கள். பசியால், பட்டினியால் வாடித் துடிக்கும் அம்மக்கள் அந்த உணவை வாங்க லாரிகளின் முன்னால் கையேந்தி முண்டியடிக்கின்றனர். கூட்டம் அதிகமாகும் நாட்களில் நாய்களுக்கு பிஸ்கட் வீசுவது போல மக்களை நோக்கி உணவுப் பொட்டலங்கள் தூக்கி வீசப்படுகின்றன. மக்கள் அதை ஓடி ஓடிப் பொறுக்கிக் கொள்ள வேண்டும். அந்த உணவையும் பெற வாய்ப்பற்ற வயது முதிர்ந்த பெரியவர்கள் மரணத்தைச் சந்திக்கின்றனர். மே 1 முதல் மே 11 வரைக்கும் மட்டும் பூந்தோட்டம் முகாமில் 61 முதியவர்கள் பட்டினியால் செத்துப் போயிருக்கிறார்கள்.

முகாமுக்கு வந்த சேர்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வேளையில், இப்போது வவுனியா முகாமைச் சுற்றி இரும்பு முள்வேலி அமைக்கப்பட்டு, அதில் மின்சாரம் பாய்ச்சப்பட்டு இருப்பதாகச் சொல்லப் படுகிறது. தப்பிக்க நினைத்தால் மரணமே பரிசு. “இப்போது எங்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. அடித்தாலும், சுட்டாலும், சிதைத்தாலும், கற்பழித்தாலும், என்ன சித்ரவதை செய்தாலும் எங்களால் வாய் திறந்து பேச முடியாது. துப்பாக்கிகளின் கண்காணிப்பில் சோறு உண்ணவும், உடுப்பு மாற்றவும் நிர்பந்திக்கப்படுகிறோம். சின்ன பாதுகாப்புக்கூட இல்லாமல் ஒரு திறந்தவெளி சித்ரவதைக் கூடத்தில் அடைக்கப்பட்டு இருக்கிறோம். இலங்கை அரசாங்கம் எங்களைப் போர்க் கைதிகளாகவே பாவிக்கிறது. எங்களைச் சிரிக்கச் சொல்லி புகைப்படம் எடுத்து, நாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாகப் பிரச்சாரம் செய்கிறது. அடுத்த நான்கைந்து ஆண்டுகளுக்கு எங்களை நிச்சயம் இந்த முகாமைவிட்டு அனுப்ப மாட்டார்கள். வெளியில் வேலைக்குப் போகக்கூட அனுமதிக்க மாட்டார்கள். அரசாங்கம் கொடுக்கும் சோற்றைத் தின்றுகொண்டு, அவர்கள் கொடுக்கும் தண்ணீரைக் குடித்துக் கொண்டு, வெறும் பிணங்களாக, அடிமைகளாக வாழ்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி இல்லை.

இனி வரும் நாட்கள் எங்களுக்கு இன்னும் மிக மோசமானதாக இருக்கும். கேட்க நாதியற்ற எங்களை, இலங்கை அரசாங்கம் என்னவும் செய்யும். கடும் சித்ரவதைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதையும் தாண்டி, எங்களின் பூர்வீகப் பிரதேசங்களில் மீளக் குடியமர்த்தினாலும் அந்த வாழ்க்கை நிம்மதியாக இருக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. எங்களின் குறைந்தபட்சப் பாதுகாப்பு அரணாக இருந்த புலிகளும் இல்லாத நிலையில், இனி நாங்கள் யாரை நம்பி வாழ முடியும்? உலகத்து நாடுகளே... தயவு செய்து எங்களை இலங்கையில் இருந்து மீட்டுச் செல்லுங்கள். இந்த தேசத்தை சிங்களனே வைத்துக் கொள்ளட்டும். அவர்களே ஆளட்டும். எங்களை விடுவியுங்கள். வேறு ஏதோ ஒரு நாடு... ஏதோ ஒரு வேலை... இலங்கை மட்டும் வேண்டாம். அரசியல் தஞ்சம் கேட்கிறோம், உயிர் தஞ்சம் கேட்கிறோம். தயவு செய்து செவிமடுங்கள்... எங்களை மீட்டுச் செல்லுங்கள்” - வவுனியா முகாமில் அடைக்கப்பட்டு இருக்கும் ஒரு பெண், அங்கு பணிபுரியும் சேவை நிறுவன ஊழியரின் உதவியுடன் நம்மிடம் பேசிய வார்த்தைகள் இவை.

இன்று பிச்சைக்காரர்களைவிடக் கேவலமான நிலையில், மேலாடை இல்லாமல், உடம்பு வற்றி கையேந்தி நிற்க வைக்கப்பட்டு இருக்கும் ஈழத் தமிழர்கள் அத்தனை பேரும் நல்ல வாழ்க்கை வாழ்ந்தவர்கள். ஒட்டு மொத்த யாழ்ப்பாணத்திலும் இப்போது எண்ணிப் பார்த்தாலும்கூட, 50க்கு மேல் பிச்சைக்காரர்கள் இருக்க மாட்டார்கள் என்பதே யதார்த்தம். தமிழகம் போல ஈழத் தமிழர்களிடம் இத்தனைப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் கிடையாது. 90 சதவிகிதம் பேர் மத்திய தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். வறுமையையும், பட்டினியையும் கண்டறியாதவர்கள். இந்தக் கொடிய போர் அவர்களைப் பிச்சைக்காரர்கள் போலக் கையேந்த வைத்திருக்கிறது.

உச்சகட்ட சித்ரவதைக் கூடமாக இருக்கும் இந்த கதிர்காமர் இடைத்தங்கல் முகாமைத்தான் ‘நலன்புரி மையங்கள்’ என்றும், ‘உலகின் முன்மாதிரி நிவாரணக் கிராமம்’ என்றும் வர்ணிக்கிறது இலங்கை அரசு. ‘உலகின் மிகப் பெரிய பணயக் கைதிகள் மீட்பு நடவடிக்கை’ என இதைப் பிரசாரம் செய்கிறது. இம் மக்களை அவர்களது வீடுகளுக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று சொன்ன ஒரே காரணத்துக்காக ஸ்ரீஸ்ரீரவிசங்கர் மீது கோபப்பட்டார் கோத்தபய ராஜபக்சே. கொழும்பிலும் இதே போன்ற நிலைமைதான்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவி நந்தினி (பெயர் மாற்றப்பட்டுள்ளது). “எங்கள் பல்கலைக் கழக வளாகம் எங்கும் தமிழர்கள் பிணமாகக் கிடக்கும் காட்சிகள் புகைப்படங்களாக மாட்டி வைக்கப்பட்டுள்ளன. ‘இதே நிலைமைதான் நாளைக்கு உங்களுக்கும்’ என்று அந்தப் புகைப் படங்களைக் காட்டி சிங்கள மாணவர்கள் எங்களை எச்சரிக்கின்றனர். நடந்து செல்லும்போது மாடிக் கட்டடத்தில் இருந்து எச்சில் துப்புகின்றனர். எங்களால் எந்தச் சிறு வார்த்தையும் பேச முடியவில்லை.

சிங்களம் கற்றுக் கொண்டு சிங்களனாக மாறுவது ஒன்றுதான் இங்கு உயிர் தரித்திருப்பதற்கான ஒரே வழி!” என்று தொலைபேசியில் கதறுகிறார்.

“கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் அடித்து நொறுக்கப்பட்டவை 56 ஆயிரம் வீடுகள். இப்படி தமிழர் வாழும் 10 மாவட்டங்களிலும் புள்ளி விவரங்கள் எடுக்கப்பட்டு புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதில் தொடங்கி, உயிரோடு இருக்கும் அப்பாவி மக்களைக் கொண்டு போய் அந்த வீடுகளில் குடியமர்த்தி, நிம்மதியான தேசத்தில் தான் வாழ்கிறோம் என்ற நம்பிக்கையை விதைப்பதில் முடிய வேண்டும். கிழக்கு மாகாணத்தில் அடிப்படை வேலைகள் தொடங்கப்பட வேண்டும். யாழ்ப்பாணத்து எமர்ஜென்சி விலக்கப்பட வேண்டும். கொழும்புத் தமிழர்கள், தங்கள் தொழிலைத் தொடர உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்” என்ற கோரிக்கையை அங்குள்ள தமிழர் அமைப்புகள் சொல்ல ஆரம்பித்துள்ளன.


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 2451 2857

**விடுதலை இராசேந்திரன்**
**மின்அஞ்சல் முகவரி**
**viduthalaikr@gmail.com**

# கண்ணீர் விட்டுப் புலம்பிய ‘பசி’

*ப.சி. தொகுதியில் வாக்கு எண்ணிக்கையின்போது நடந்ததுபற்றி ஜனசக்தி நாளேடு (மே 25) வெளியிட்டுள்ள செய்தி.*

என்னதான் நடந்தது என்று விசாரித்தால் கதைகதையாய்ச் சொல்கிறார்கள்! தனக்குத் தோல்வி முகம் தான் என்று தெரிந்ததும் சிதம்பரம் வாக்கு எண்ணிக்கை நடந்த இடத்திற்கு ஓட்டமாய் ஓடி வந்தாராம்! அங்கே விசாரித்து, இங்கே விசாரித்து நிலைமையைத் தெரிந்து கொண்டதும் தலையில் அடித்துக் கொண்டாராம்! இந்தத் தேர்தலில் எனக்குத் தோல்வி என்றால் நான் உயிரோடு இருக்க மாட்டேன், அப்புறம் எனக்கு எதற்கு உயிர், செத்து விடுவேன், ஆமா, செத்து விடுவேன்! என்று வாய்விட்டு புலம்பியிருக்கிறார்.

இப்படிப் புலம்பித் தவிக்கிறவர் யாரோ ஒரு சாதாரண வேட்பாளர் அல்லவே! காங்கிரஸ் பெருந்தலை! அதுவும் மத்திய மந்திரி! அதுவும் உள்துறை மந்திரி! பக்கத்தில் இருக்கும் கட்சிக்காரர்கள், காவல்துறையினர் மற்றும் அதிகாரிகள் சும்மா இருப்பார்களா? செய்திகள் பறக்க வேண்டிய இடங்களுக்குப் பறந்தனவாம்! டெல்லியிலிருந்தும் சென்னையிலிருந்தும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் வந்த ஏகோபித்த செய்தி அல்லது உத்தரவு அல்லது மிரட்டல் “ரிசல்ட்டை அறிவிக்க வேண்டாம்; நிறுத்தி வையுங்கள்; அல்லது தாமதம் செய்யுங்கள்” என்பதுதானாம். இப்படியான உத்தரவு மேலே சொன்ன இடங்களிலிருந்து மட்டுமல்ல, ‘அம்பானி இல்லத்திலிருந்தும் பறந்து வந்ததாம்!

அ.தி.மு.க. சார்பில் வேட்பாளரும் மற்றவர்களும் ‘ரிசல்ட்டை அறிவியுங்கள்’ என்று எவ்வளவோ முயன்று பார்த்திருக்கிறார்கள். முடியவில்லை! சகலவிதமான ஆயத்தங்களோடு மாவட்ட ஆட்சியரே நேரில் வந்து பிரசன்னம் ஆகி, கூத்துக்களை நடத்தும்போது மற்றவர்கள் என்ன செய்ய முடியும்? அவர்களுக்கும் அடுத்து என்ன செய்வது என்று தெரியாத பதட்டம்! “கிடைத்த ரிசல்ட்டை உடனே அறிவியுங்கள், தாமதம் செய்யாதீர்கள்” என்று குரல் மட்டும் தானே கொடுக்க முடியும்!

அதற்குள் போலீஸ், பிற அதிகாரிகள், மாநில ஆளுங்கட்சியின் பெருந் தொண்டர்கள், சிறுத் தொண்டர்கள் எல்லாருமாகக் கூடி ஒரு செயற்கையான ‘டென்சன்’ நிலவரத்தை உருவாக்கி விட்டார்கள். டெல்லியிருந்து சமிக்ஞை வந்தவுடன், அம்பானி இல்லத்துப் பச்சை விளக்குத் தெரிந்தவுடன், சென்னைப் பெரியவர் ஒரு ‘ஐடியா’ கொடுத்திருக்கிறார்.

அதாவது ஏதோ சிறு குழப்பம் வந்ததாகவும் உடனே மாவட்ட ஆட்சியர் ஸ்பாட்டுக்கு வந்ததாகவும், “ம், ரீகவுண்ட் செய்யுங்க” என்று உத்தரவு போட்டதாகவும், அதற்கென்றே காத்திருந்த கவுண்டிங் அதிகாரிகள் படபடவென்று எண்ணி ஒரு சில ஆயிரம் வாக்குகள் வித்தியாசம் என்று சொல்லி, “ஜெயித்தார் சிதம்பரம்” என்று அறிவித்ததாகவும் ஒரு நாடகம் ஆடி, உடனேஜெயித்தார் என்று சர்டிபிகேட் கொடுத்து, உடனே ‘பசி’ அங்கிருந்து பறந்துவிட வேண்டும் என்பது பெரியவர் கொடுத்த நாடக வடிவம்! நாடகம் ஆடுவதில் அவருக்கு நிகர் அவர்தான்! இத்தனையும் மின்னல் வேகத்தில்! கொக்கு ஒன்று மீனைக் கவ்வுவது போல, ‘பசி’ மாவட்ட ஆட்சியர் கொடுத்த சர்டிபிகேட்டை வாங்கிக் கவ்விக் கொண்டு பறந்துவிட்டார் பறந்து!

யாராவது ஒரு பத்தாம்பசலி பழைய காங்கிரஸ்காரர் என்ன நினைப்பார்? காங்கிரஸ்காரரான ‘பசி’, நேரே மாநிலக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவைப் பார்த்து, தான் ‘வெற்றிக் கொண்டான்’ ஆகிவிட்டதைச் சொல்வது போல் சொல்லி, தங்கபாலு தோல்வியடைந்ததற்குச் சில ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, அதன் பிறகு சென்னை சென்று பெரியவரை மரியாதை நிமித்தம் பார்த்துவிட்டு, அப்புறமாய் டெல்லி மாநகருக்குப் போவார் ‘பசி’ என்று தானே நினைப்பார்! அதுதான் இல்லை.

தொலைக்காட்சியில் பார்த்தவர்கள் சொல்கிறார்கள், என்ன வேகத்தில் வந்தார் இந்தப் பசி, நேரே கோபாலபுரம் போய்ப் பெரியவரின் கால்களில் விழுந்து வணங்கி, பக்கத்தில் உட்காரவும் பயந்து தள்ளித் தள்ளி உட்கார்ந்து – என்ன கண்றாவிக் காட்சி! இருக்காதா பிறகு? உயிரையே மீட்டுக் கொடுத்த பெரியவருக்கு மரியாதை காட்ட வேண்டுமல்லவா! நன்றி தெரிவிக்க வேண்டும் அல்லவா! அடடா! இந்தியத் தேர்தல் ஜனநாயக நாடகத்தின் கண்கொள்ளாக் காட்சி அது! இந்தத் தேசத்தில் கொஞ்ச நஞ்சம் தேசபக்தியோடு, காங்கிரஸ் இயக்க உணர்வோடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒரு சிலராவது புரிந்து கொண்டால் சரி!

சரி; எல்லாம் போகட்டும். சந்தி சிரித்தாயிற்று; மக்கள் கூடும் பந்தியிலும் மக்கள் பேசியாயிற்று; எப்படியோ டெல்லிக்கு ஓடிப் போய் ‘வென்றேன்’ பட்டியலில் சேர்ந்தாயிற்று; பழைய பதவியிலேயே உட்கார்ந்தும் ஆயிற்று.

பதவி ஏற்றதும் மந்திரி தமிழ்நாட்டுக்கு வருகிறார்! மரியாதை எப்படி இருக்கும்? இத்தனை தில்லுமுல்லுகள் செய்யச் சொல்லி, செய்து காப்பாற்றிவிட்ட அந்தக் கட்சிக்காரர்களின் பார்வை எப்படி இருக்கும்? முன்பு நடப்பீர்களே, அப்படிச் சிரித்துச் சிரித்து உங்களால் நடக்க முடியுமா? மேல் நாட்டுப் படிப்பினால் ஒரு மாதிரி ஆங்கிலத்தை உச்சரித்து உச்சரித்துப் பக்கத்தில் இருப்பவர்களைப் பயமுறுத்து வீர்களே, அப்படிப் பயமுறுத்த முடியுமா? கனிமொழி வீட்டுக் கட்டுத்தறிகூட இனி உங்களை மதிக்காதே! அழகிரி வீட்டு ‘அல்சேஷன்’ கூட உங்களைப் பார்த்து ஒரு மாதிரி முறைக்குமே!

# உறுதி செய்யப்படாத பிரபாகரன் மரணம்

தமிழர் தேசியத் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று சிங்களம் அறிவித்தவுடன், அதை உடனே மே 18 ஆம் தேதி மறுத்து, அவர் நலமுடன் உள்ளதாக அறிவித்தவர், விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளராக அண்மையில் நியமிக்கப்பட்ட செல்வராசா பத்மநாபன். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் உளவுப் பரிவுத் தலைவர் அறிவழகன், பிரபாகரன் நலமுடன் உள்ளதாக அறிவித்தார். இந்த நிலையில் சர்வதேச பொறுப்பாளர் பத்மநாபா செல்வராசா பி.பி.சி.க்கு அளித்த பேட்டியில் பிரபாகரன் இறந்துவிட்டதாக அறிவித்ததைத் தொடர்ந்து உலகத் தமிழர்களிடையே பெரும் கொதிப்பை உருவாக்கியது. இந்த நிலையில் விடுதலைப்புலிகளின் அதிகாரப்பூர்வ இணையதளமாகக் கருதப்படும் ‘தமிழ் நெட்’ இணைய தளத்தில் இதை மறுத்துள்ளது.

தங்களுடைய வாசகர்கள் பலரும் இந்தத் தகவல்கள் குறித்து விசாரித்ததாகவும், சுதந்திரமாக உறுதிப்படுத்த முடியாத எந்தத் தகவலையும் வெளியிடுவதில்லை என்றும், பிரபாகரனைப் பற்றி வெளியாகும் தகவல்கள் தொடர்பாக எந்த ஒரு பொறுப்பையும் தமிழ் நெட் ஏற்காது என்றும் கூறியுள்ளது. பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாக பல்வேறு விதமான செய்திகளை வெளியிட்ட சிங்கள அரசும், ராணுவமும் அதனை ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கத் தவறிவிட்டன என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

தாங்கள் விடுத்த தகவலை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க எந்த முயற்சியையும் சிங்கள அரசு மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது. பிரபாகரன் தொடர்பான தகவல்களை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு இந்திய அரசிற்கும் உள்ளது. ஏனென்றால், 1980களில் பிரபாகரன் சென்னையில் கைது செய்யப்பட்டபோது அவருடைய உடலியல் கூறுகள் தொடர்பான விவரங்கள் காவல்துறையினரால் சோதிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சிங்கள அரசு பிரபாகரன் இறந்ததாக கூறியவுடன் தன்னிடம் உள்ள ஆதாரங்களைக் கொண்டு அதனை ஐயத்திற்கிடமின்றி இந்திய அரசு நிரூபித்திருக்க வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட கோரிக்கை எதையும் வைக்காமல், பிரபாகரன் இறந்து விட்டதை சிங்கள அரசிடம் கேட்டு உறுதி செய்தது மட்டுமின்றி, அவருடைய மரணச் சான்றிதழை அந்நாட்டு அரசிடம் கேட்டிருப்பதும் ஏன் என்று புரியவில்லை என்றும், இப்பிரச்சினையில் இந்தியாவின் மௌனம் அதன் வசதியாக இருக்கக் கூடும் என்றும் ‘தமிழ் நெட்’ கூறுகிறது.

இவைகள் மட்டுமின்றி, உலகத் தமிழர்களை பாதிக்கக்கூடிய இப்படிப்பட்ட செய்தி குறித்து சரியான விவரங்களை எந்த ஒரு சுயேச்சையான பன்னாட்டு அமைப்பும் முயன்று பெற்று வெளியிட முன்வராததும் சந்தேகங்களை மேலும் வலுப்படுத்துகிறது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:

மே 18 ஆம் தேதி பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று சேனல் 4 என்ற லண்டன் தொலைக்காட்சியில் அறிவித்த விடுதலைப் புலிகளின் அனைத்து உலகத் தொடர்பு பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன், திடீரென்று அந்தர் பல்டி அடித்து பிரபாகரன் இறந்து விட்டார் என்று அறிவித்தது, கடைந்து எடுத்த அயோக்கியத்தனமான துரோகச் செயல் ஆகும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு ஏகப் பிரதிநிதியாக அறிக்கை விடும் அதிகாரம் அவருக்குக் கிடையாது. மிக அண்மையில்தான் அவர் இந்தப் பொறுப்புக்கே நியமிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களோடும், துரோகம் செய்து வெளியேறியவர்களோடும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு, விடுதலைப் புலிகள் அமைப்பில் குளறுபடிகளை ஏற்படுத்தவும் அவர் திட்டமிட்டு உள்ளதாகத் தெரிகிறது. வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் பிடிக்குள் பத்மநாபன் சிக்கி இருப்பதற்கான ஆதாரங்களும் கிடைத்து இருக்கின்றன.

கொடுந்துயரில் ஈழத் தமிழ் இனம் சிக்கி வதைப்படும் நேரத்தில் செல்வராசா பத்மநாதனின் அறிவிப்பு மன்னிக்க முடியாத துரோகம் ஆகும். ஈழத் தமிழ் மக்களும், தாய்த் தமிழகத்திலும், தரணி எங்கும் உள்ள தன்மான உணர்வு கொண்ட தமிழர்களும், இதை நம்ப வேண்டாம். தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறார். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அனைத்து உலகப் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் அறிவழகன் தனது அறிக்கையில், பிரபாகரன் உயிருடன் இருப்பதை உறுதி செய்து உள்ளதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தலைவர் பிரபாகரன் வென்றெடுக்கக் களம் அமைத்த லட்சியங்களை வெல்லவும், ஈழத் தமிழர்களின் துயர் துடைக்கவும் உறுதி கொண்டு நம் கடமைகளைத் தொடர்வோம் - என்று வைகோ குறிப்பிட்டுள்ளார். ●

# விடுதலைப் போராட்டம் ஓயாது!

இவ்வளவு கொடுமைகளுக்கும் ஈழம் கசாப்புக் கடை ஆனதற்கும் ராஜபட்சே முதற் காரணம்! ஆயுதம் வழங்கிய மன்மோகன் சிங் துணைக் காரணம்! மன்மோகன் சிங்கை முடக்குகின்ற அதிகாரம் முற்றாக வாய்த்திருந்தும், அந்த அதிகாரத்தை உரிய வழியில் பயன்படுத்தி இந்தியாவின் அயல் விவகாரக் கொள்கையையே மாற்றுவதை விடுத்து, நாளைக்கொரு மனித சங்கிலி, ஒரு வேளை தொடங்கி மறுவேளை வரும்வரை உண்ணா நோன்பு என்று பல்வேறு நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருந்த கருணாநிதி இன்னொரு துணைக் காரணம்!

ராஜபட்சே என்னும் முதற் காரணமும் மன்மோகன் சிங், கருணாநிதி என்னும் துணைக் காரணங்களும் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பிணமாவதற்கும் நான்காம் விடுதலைப் போர் முடிவுக்கு வரவும் காரணங்களாயின! நான்காம் விடுதலைப் போர் முடிவுற்று விட்டது. அதனுடைய பொருள் ஐந்தாம் விடுதலைப் போர் அடுத்துத் தொடங்கும் என்பதே!

நான்கோடு எண்ணிக்கை முடிந்துவிட்டதாக ராஜபட்சவோ, மன்மோகன் சிங்கோ, கருணாநிதியோ, கருணாவோ கருத மாட்டார்கள். நான்கின் வளர்ச்சி ஐந்து என்பதை அவர்கள் அறியாதவர்களில்லை! எந்த விடுதலைப் போராட்டமும் இலக்கை அடையாமல் முற்றுப் பெற்றதாக வரலாறு கிடையாது.

ஒரு வேளை அந்த ஒற்றைப் பிரபாகரன் இல்லையென்றே ஆகிவிட்டாலும் ஓராயிரம் பிரபாகரன்களை காலம் உடனடியாக உருவாக்கும்! ஈழத்தின் தேவைக்கேற்பக் காலத்தால் வடிவமைக்கப்பட்டவன்தானே பிரபாகரன்! ஈழம் தான் அற்றுப் போய்விட்டதா? அல்லது காலம் தான் அற்றுப் போய்விட்டதா?

**‘தினமணி’ 26.5.2009 ஏட்டில் பழ. கருப்பையா**

# உலகை உண்டாக்கியது கடவுளா? ஒரு சுவையான வினா – விடை!

எந்த மதவாதியை சட்டையைப் பிடித்துக் கேட்டாலும், 'கடவுள்' ஒருவர் உண்டு என்பதற்குக் கைவசம் வைத்துள்ள ஒரே பதில், "ஒருவன் இல்லாமல் இந்த உலகம் தோன்றி இருக்க முடியுமா?" என்பதுதான். இது எவ்வளவு பெரிய அடிவண்டல் மூடத்தனம் என்பதை விஞ்ஞானம் இருள் கிழித்துக் காட்டியிருக்கிறது. அதன் தலையாய விளக்கங்களை வினா – விடையாக இப்பகுதியில் காணலாம். திரு.வி.தங்கவேல் சாமி அவர்களின் 'கடவுள் கற்பனையே – புரட்சிகர மனித வரலாறு' ஆகிய நூல்களின் அடிப்படையில் தொகுக்கப் பட்டது.

***வினா :*** பொருள் என்றால் என்ன?

***விடை :*** இடத்தை நிறைப்பது அனைத்தும் பொருள்களே. சிறு தூசி, பெரு மலைகள், பூமி, சூரியன், நட்சத்திரங்கள், செடி, கொடிகள், மிருகங்கள், மனிதர்கள் அனைத்தும் பொருள்களே! எந்தப் பொருளையும் சிறிது சிறிதாகப் பிளந்து கொண்டே சென்றால் கடைசியில் நாம் காணுவது அணு. அணுவின் மையத்தில் அணுக் கரு உள்ளது. அணுக்கரு முக்கியமாகப் புரோட்டான், நியூட்ரான் என்ற துகள்களால் ஆக்கப்பட்டது. அணுக் கருவை எலக்டிரான் துகள்கள் சுற்றிக் கொண்டுள்ளன. பொருளின் தன்மை முக்கியமாக அதன் அணுவில் உள்ள புரோட்டான்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது. உதாரணமாக தங்கத்தின் குணம் அலுமினியத்தின் குணத்திலிருந்து மாறுபட்டு இருக்கிறது என்றால், தங்கத்தின் அணுவில் 79 புரோட்டான்களும், அலுமினியத்தின் அணுவில் 13 புரோட்டான்களும் உள்ளன. எனவேதான் ஒரே அளவுள்ள தங்கம் அதே அளவுள்ள அலுமினியத்தை விட அதிகக் கனமாக இருக்கிறது. இயற்கையில் ஒன்று முதல் 104 வரை புரோட்டான்கள் உள்ள குணங்களைக் கொண்ட மூலகங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

***வினா :*** பொருள் எவ்வாறு தோன்றியது? எப்பொழுது தோன்றியது?

***விடை :*** இந்த வினாவிற்கு "சக்தி நிலைத்துவ" விதி விடை கூறுகின்றது. "சக்தியை அழிக்கவும் முடியாது - ஆக்கவும் முடியாது" என்பதுதான் இந்த விதி. சக்தி பல்வகைப்படும். வெப்ப சக்தி, ஒலி சக்தி, ஒளி சக்தி, இயக்கு சக்தி, மின் சக்தி, காந்த சக்தி, அணு சக்தி என்பது சக்தியின் வெவ்வேறு நிலைகள் ஆகும். இவ்விதியின் படி ஒரு சக்தியை இன்னொரு சக்தியாக மாற்ற முடியுமேயல்லாது அதை ஒன்றுமே இல்லாததாக அழிக்கவோ, மாற்றவோ முடியாது. உதாரணமாக மின்விசிறியால் மின்சார சக்தி இயக்கு சக்தியாக மாற்றப்படுகின்றது. ரயில் என்ஜினில் வெப்ப சக்தி உருளைகளை இயக்கும் சக்தியாக மாற்றப்படுகின்றது. சக்தியும் பொருளும் வெவ்வேறல்ல. சக்தியை அறவே அழிக்க முடியாது என்பது போலவே பொருளையும் அறவே ஒன்றுமில்லாமல் ஆக்கவும் முடியாது - ஒன்றுமே இல்லாததிலிருந்து ஒரு பொருளை ஆக்கவோ உண்டாக்கவோ முடியாது. ஒரு விறகுக் கட்டையைத் தீயிலிட்டால் அது கரியாகவும், வாயுவாகவும் மாற்றப்படுமேயல்லாது, அதை ஒன்றுமற்ற சூனியமாக ஆக்க முடியாது. சூனியத்திலிருந்து ஒரு பொருளையும் உண்டாக்கவும் முடியாது. எனவே, ஒன்றுமில்லாததிலிருந்து உலகத்தைக் கடவுள் படைத்தார் என்று மதங்கள் கூறும் கூற்று இந்த விதிக்குப் புறம்பானது; அதாவது, விஞ்ஞானத்திற்குப் புறம்பானது; உண்மைக்கு அப்பாலானது. இவ்விதியின்படி பொருள் இப்பொழுது இருப்பதால் எப்பொழுதும் ஏதாவது ஒரு வடிவத்தில் இருந்து கொண்டே இருக்கும். எப்பொழுது தோன்றியது என்ற கேள்வியே அர்த்தமற்றது.

***வினா:*** உயிர் எப்பொழுது தோன்றியது? எவ்வாறு தோன்றியது?

***விடை:*** சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி சூரியனின் ஒரு பாகமாகவே இருந்து வந்துள்ளது. சூரியனில் ஏற்பட்ட சலனங்களின் காரணமாக அதன் ஒரு பகுதி சிதறி ஈர்ப்பு சக்தி காரணமாகவே சூரியனைச் சுற்றிக் கொண்டு இருக்கிறது. சூரியனிடமிருந்து பூமி பிரிந்த காலத்தில் அது சூரியனின் வெப்ப நிலையில்தான் இருந்திருக்க முடியும். அதாவது, 5000 டிகிரி சென்டி கிரேட். அந்த டிநிலையிலிருந்து 500 கோடி ஆண்டுகளாகக் குளிர்ந்து பூமியின் வெப்பநிலை 30 டிகிரி சென்டி கிரேட்டுக்கு குளிர்ந்துள்ளது. நீராவி குளிரும் பொழுது அணுக் கூட்டங்களின் சலனத்தால் ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் அது நீராக மாறுகின்றது. நீர் குளிரும் பொழுது ஒரு வெப்ப நிலையில் பனிக்கட்டியாகிறது. நீராவி, நீர், பனிக்கட்டி ஆகிய மூன்றுக்கும் குண மாறுபாடுகள் உள்ளன. ஆனால், மூன்றும் ஹைட்ரஜன், ஆக்சிஜன் என்ற மூலகங்களால் ஆனது தான். இதேபோல் பூமி குளிரும் பொழுது ஒரு நிலையில் உயிரற்ற பொருளில் இருந்து ஒரு 'செல்' உடைய உயிர் தோன்றுகிறது. அதாவது உலகத்தின் வெப்பம் தணிந்து நீர் தோன்றிய பிறகு "அமீனோ ஆசிட்" என்ற திரவத்தின் மீது சூரிய கிரகணங்கள் விழ, நாளடைவில் உயிர்த்துளிகள் ஏற்பட்டு, நாளடைவில் இவ்வுயிர்த்ளிகள் பரிணாம வளர்ச்சியின் காரணமாக "பெப்டைட்டு" என்பன ஏற்பட்டன. பிறகு, "புரோட்டின்கள்" ஏற்பட்டன. "புரோட்டின்" உணவில்லாமல் உயிர் வாழ முடியாது.

உயிருக்கு அஸ்திவாரம் இந்த 'செல்' ஆகும். உயிரற்ற பொருளாக பூமி தோன்றி சுமார் 400 கோடி ஆண்டுகளுக்கு பின்புதான் உயிர் தோன்றியுள்ளது.

இந்த செல்கள் பரிணாம வளர்ச்சியினாலும், சேர்க்கையினாலும் ஒரு செல் உயிர் பல செல் உள்ள உயிராகிப் பெருகி வளர்ந்து, மேலும் மேலும் உயர்ந்த நிலைகளுக்கு மாறி கடைசியில் மனித உருவம் தோன்றியுள்ளது.

குறிப்பிட்ட சீதோஷ்ண நிலையில் உயிரில்லாப் பொருள் என்று நாம் கூறக் கூடியது உயிருள்ளதாக மாறுகிறது. அதாவத, உயிர் என்பது பொருளின் ஒரு இன்றியமையாத குணமாகும். குறிப்பிட்ட சூழ்நிலையில் அது வெளிவருகிறத. இந்த சூழ்நிலை மாறினால் இந்தக் குணம் மங்கிவிடுகிறது. ●

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவுக்கு வழங்கப்பட்டது மரண தண்டனை என்று பேசியதற்காக, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் தமிழக அரசு கைது செய்தது. 62 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு கழகத்தலைவர் மீதான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. தொடர்ந்து இப்போது கழகத்தின் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்துள்ளது. இந்த வழக்கு தொடர்பாக கழகத் தோழர்கள் சூலூர் பன்னீர்செல்வம், அ.ப.சிவா, திருப்பூர் இராவணன், பல்லடம் விஜயன், திருமய்யம்பாளையம் முரளி, சூரி எனும் ஆறுமுகம், பல்லடம் ஜெகதீசன் உட்பட 20 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தவிர ஈழத்தில் சிங்கள ராணுவம் முற்றாக தமிழர் அழித்தொழிப்பை நடத்தி முடித்து, மாவீரர் பிரபாகரன் இறந்துவிட்டதாக அறிவித்த நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் கோவை மாவட்டம் முழுதும் கழகச் செயல் வீரர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். கோவை மாவட்டத் தோழர்கள் கோபால், உமேஷ், ஜெகன், நாகராஜ், சம்பத், பிரகாஷ், அருண்குமார், சத்தியமூர்த்தி, கதிரேசன் மற்றும் திருப்பூர் அங்ககுமார், முகில்ராசு உள்ளிட்ட பல தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஈழத் தமிழர் இனப் படுகொலைகளை விளக்கிடும் குறுந்தகடு வைத்திருந்ததாக ஈரோடு மாவட்டக் கழக செயலாளர் இராம இளங்கோவன் கைதுசெய்யப்பட்டு, கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கோவை பெரியார் படிப்பகத்தின் நிர்வாகி, கழகத் தோழர் கதிரவன், இதே குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு, 23 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு நிபந்தனை பிணையில் விடுதலையாகியுள்ளார். சேலம் மாவட்ட கழகத் தோழர்கள் டேவிட், விசு, காமராசு உள்ளிட்ட தோழர்கள் முன்னெச்சரிக்கை கைது என்ற பெயரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மத்திய சென்னை தொகுதியில் காங்கிரஸ் துரோகத்தை விளக்கிப் பிரச்சாரம் செய்த ஒரே காரணத்துக்காக இராயப்பேட்டையிலுள்ள பெரியார் படிப்பகத்தை தி.மு.க. ஆதரவு குண்டர்கள் தாக்கி பெரியார் சிலையையும் சேதப்படுத்தினர். சிலைகளை சேதப் படுத்துவோர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று மாநகர காவல்துறை இயக்குநர் அறிவித்திருந்தும் பெரியார் சிலையை தாக்கியோர் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. மாறாக, கழகத்தினர் மீது தி.மு.க. தேர்தல் அலுவலகத்தை தாக்கியதாக பொய் வழக்கு புனைந்து கைது செய்துள்ளனர் ஏற்கனவே இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட தீபக், இராவணன், விஜயன் மற்றும் தோழியர்கள் தமிழ்ச் செல்வி, சுதா ஆகியோர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலையான நிலையில், இதே வழக்கில், இப்போது, சென்னை மாவட்ட கழக செயலாளர் உமாபதி, குமரன், விஜி, குமரன், ஜெயக்குமார், கார்த்திக், தமிழரசு ஆகிய தோழர்களை காவல்துறை கைது செய்துள்ளது. பெரியார் திராவிடர் கழகம் கொள்கை உறுதியோடு களப்பணியாற்றுவதற்காக கடும் விலையைக் கொடுத்து வருகிறது. என்றாலும் கழகம் இந்த அடக்கு முறைகளை உறுதியோடு எதிர்கொண்டு மீண்டும் தீவிரமாக களப் பணிகளில் இறங்கும்.

கோவை சிறையில் உள்ள கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மற்றும் தோழர்களை கழகத் தலைவர் கொளத்தூர் மணி சந்தித்தார். மூத்த வழக்கறிஞர் துரைசாமி, கோவை சிறையில் பொதுச்செயலாளரை சந்தித்து தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைப் பெற்று உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். ●

---

## கழகத்தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்!

'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தா கடந்த டிசம்பர் மாதத்தோடு முடிவடைந்த பிறகும், தொடர்ந்து இதழ் அனுப்பப்பட்டு வருகிறது. எனவே சந்தா முடிவடைந்த தோழர்கள் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தாதாரர் பட்டியல் ஏற்கனவே மாவட்ட பொறுப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொறுப்பாளர்கள் அதை புதுப்பித்து உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th May 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.